விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆடி 21 செவ்வாய்க்கிழமை (06.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 230

## நல்லூர் அலங்காரக் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்

### ஆலய சூழல் முழுமையாக இராணுவம், பொலிஸ் பாதுகாப்பில்



(யாழ்ப்பாணம்)
நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடி

▶23

## அமைச்சரை நீக்கும் அதிகாரம் முதலமைச்சருக்கு இல்லை

### டெனீஸ்வரன் மனுவில் நீதிமன்றம் தீர்ப்பு



(கொழும்பு)
வட மாகாண முன்னாள் அமைச்சர் பா.டெனீஸ்வரனை முதலமைச்சர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் பதவி நீக்கம் செய்த முறை தவறு என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது.

அத்துடன், மனுதாரரான பா.டெனீஸ்வரனுக்கு வழக்குச் செலவை வழங்குமாறு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்


▶23

## -பொதுமக்களின் காணியை அபகரிக்கவா-

# பலாலி விமான நிலைய நுழைவாயில் மாற்றப்படுகின்றது

(யாழ்ப்பாணம்)

**பொதுமக்களின் காணியை அபகரிக்கவா? பலாலி விமான நிலையத்தின் நுழைவாயில் கிழக்கு பக்கத்தில் இருந்து மேற்குப் பக்கமாக மாற்றப்படுகிறது என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.**




பலாலி வீதிக்குக் கிழக்குப் பக்கமாக இருந்த பலாலி விமான நிலைய நுழைவாயிலைத் தற்போது மயிலிட்டிப் பக்கமாக (மேற்குப்புறம்) மாற்றும் நடவடிக்கைகள் திரைமறைவில் நடந்து வருவதாக அறிய முடிகிறது.

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகள் வடக்கு மக்களுக்கு ஓர் நற்செய்தியாக அமைந்தாலும் குறித்த விமான நிலையத்தின் முன்பிருந்த கிழக்குப் பக்க நுழைவாயிலை மேற்குப் பக்கமாக மாற்றும் செயற்பாடு பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துவதாய் அமைகிறது.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குறித்த பலாலி விமான நிலையத்தின் பழைய நுழைவாயிலான பலாலி வீதியின் கிழக்குப்பகுதி அதிக தனியார் குடியிருப்புகளைக் கொண்ட பகுதியாகும்.

அது மட்டுமல்லாமல் உயர் பாதுகாப்பு வலயம் எனக் கூறும் ஏறக்குறைய இரண்டாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட தனியார் காணிகளை உள்ளடக்கிய பகுதிகளாக கிழக்கு மற்றும் அதனோடு இணையும் தெற்கு எல்லைகளும் காணப்படுகின்றது.

பலாலி விமான நிலையத்தின் பழைய நுழைவாயில் இருந்த இடத்தில் மீண்டும் அமைத்தால் எதிர்காலத்தில் குறித்த கிழக்குப் பக்கமாக காணப்படுகின்ற 2 ஆயிரம் ஏக்கர் தனியார் காணியை விடுவிக்க

▶23

### 13வது திருத்தச் சட்டம்

## எவ்வளவு வலுவற்றது என இப்போது புரிந்திருக்கும்

### விக்னேஸ்வரன் தன்னிலை விளக்கம்

(யாழ்ப்பாணம்)
13ஆவது திருத்தச்சட்டம் எவ்வளவு தூரம் வலுவற்றது என இப்பொழுது எல்லோருக்கும் புரிந்திருக்கும் என நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

டெனீஸ்வரன் வழக்குத் தொடர்பில் ஊடக

▶23

## நல்லூருக்கு வரும் பக்தர்கள் அச்சமின்றி வழிபடலாம்

### யாழ்.மாநகர முதல்வர் ஆர்னல்ட்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில், பக்தர்கள் அச்சமின்றி வழிபாடுகளில் ஈடுபட முடியும் என, யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து

▶23

## சஹ்ரானுடன் பயிற்சி பெற்ற மூவர் அம்பாறையில் கைது

(கொழும்பு)
தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவர் சஹ்ரான் காஸீமுடன் ஆயுதப் பயிற்சி பெற்ற தடை செய்யப்பட்ட ஜமியத்தே மில்லாது இப்ராஹீம் அமைப்பின் மூன்று உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் நேற்று திங்கட்கிழமை அம்பாறையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தடைசெய்யப்பட்ட ஜமியத்தே மில்லாது இப்ராஹீம் அமைப்பின் கிழக்கு மாகாணத் தலைவர் உட்பட இருவர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்

▶23

## விபத்துக்குள்ளான இளைஞன் உயிரிழப்பு



(முல்லைத்தீவு)
வீதி விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்

▶23

## ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை நிறுத்தக் கோரி

### வற்றாப்பளை அம்மன் கோவிலில் ஆயிரம் தேங்காய் உடைத்து வழிபாடு

(பனிக்கன்குளம்)
எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு கோரி வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களை சேர்ந்த



▶23

### பாராளுமன்ற உறுப்பினர்

## திசாநாயக்க காலமானார்



▶23

## யாழில் திடீரென முளைத்த இராணுவ சோதனைச் சாவடிகள்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் திடீரென இராணுவச் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதுடன் சில இடங்களில் அடையாள அட்டையும் பதிவு செய்யப்படுகின்றன.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்த

▶23

### சுவிட்சர்லாந்தில்

## ஏரியில் மூழ்கி ஈழத்துச் சிறுமி உயிரிழப்பு



(சூரிச்)
சுவிட்சர்லாந்து; நிட்வால்டன்

▶23

## பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பிரதமர் ரணில் இன்று சாட்சியம்

(கொழும்பு)
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கண்டறியும் பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு இன்று பிற்பகல் மீண்டும் கூடவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான சாகல. ரத்னாயக்க, ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன ஆகியோர் இன்றைய தினம் சாட்சிப் பதிவுகளுக்கு ஆஜராகவுள்ளதாக தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாய

▶23

# மரண அறிவித்தல்கள்

## பொன்னர் தியாகராஜா (K.P.T ராஜா)




நிற்சாமம் சங்கானையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கானை கேம்பிறிச் கல்வி நிலைய இயக்குநர் பொன்னர் தியாகராஜா (K.P.T ராஜா) நேற்று (05.08.2019) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னர் - முத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இராமு - பூமணி தம்பதிகளின் மூத்த மருமகனும், கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், தரங்கினி (ஆசிரியர் - யா/பிரான் பற்று கலைமகள் வித்தியாலயம்), தாரகா (லண்டன்), தயானிகா (ஆசிரியர் - யா/வட்டு இந்துக் கல்லூரி), ஆகியோரின் தந்தையாரும், பிறேம்நாத் (ஆசிரியர் - கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயம்), சுகர்ணன் (லண்டன்), பிரதீப் (ஆசிரியர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் மாமனாரும், யர்வின், அஸ்னா, சனோ, சயா, சிபாறா ஆகியோரின் பாசமிகு பேரனும், சற்குணம், காலஞ்சென்ற தெய்வேந்திரம், கௌசலா தேவி, காலஞ்சென்ற றாதா (கிளை முகாமையாளர், சங்கானை பல.நோ.கூ.சங்கம்) மற்றும் மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரரும், பூமலர், லில்லிமலர், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, திலகவதி மற்றும் ஜெயரட்ணம், தர்மகுலசிங்கம் (சுவிஸ்), ஜெயகுலசிங்கம் (சுவிஸ்), மாலினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், வடமாகாணம்), தயாளினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், சங்கானை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.08.2019 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : (மருமக்கள்)
ம.பிறேம்நாத் - 077 748 8430,
ஜெ.சுகர்ணன்,
இ.பிரதீப் - 077 639 2690

**நிற்சாமம், சங்கானை.** (9818)



## கணபதி மகாலிங்கம்

பிறப்பு - 08.01.1949 இறப்பு - 04.08.2019

கோண்டாவில் தில்லையம்பதியை பிறப்பிடமாகவும் சிவகுல வீதி உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி மகாலிங்கம் அவர்கள் 04.08.2019 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி - செல்வி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நன்னியர் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், றோசம்மாவின் அன்புக்கணவரும், யசோதா (லண்டன்), குகன் (லண்டன்), கிருபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பவளம், இலட்சுமி, பொற்கொடி, புஸ்பராணி மற்றும் தில்லையம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற தம்பிராசா, ஞானம்மா மற்றும் இராசம்மா, தங்கம்மா, பொன்னையா, செல்லையா, ஜெயராணி, சரோசினிதேவி, புஸ்பதேவி, புஸ்பலதா ஆகியோரின் மைத்துனரும், குகநீதன் (லண்டன்), பிரதீப்ராஜ், சுதர்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷனன், திவ்யா, பிரதிக்ஷா, மேனுஜன், டிலக்ஷனா, பிருத்திகா, கிருஷ்ரிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2019) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு.** (C-7208)

தகவல் :
குடும்பத்தினர்
077 816 5138

# வடக்கு மாகாணத்தில் கல்விப் பணிப்பாளர்களாக நால்வர் நேற்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நான்கு புதிய கல்விப்பணிப்பாளர்கள் நேற்றையதினம் திங்கட்கிழமை தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதி பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.கமல்ராஜன் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளராகவும் யாழ் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) கடமையாற்றிய பொ.ரவிச்சந்திரன் தீவக வலயக் கல்விப்பணிப்பாளராகவும் தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய எஸ்.கிருபாகரன் தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளராகவும் வவுனியா வடக்குப் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய திருமதி மாலதி முகுந்தன் துணுக்காய் கல்விப் பணிப்பாளராகவும் நியமனம் பெற்று கடமைகளைப் பொறுப்பேற்றனர். (ம-10)

# பயங்கரவாதத்துடன் தொடர்பு; மூவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளுக்கு வெடிபொருட்களை வழங்கிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்ட மூன்று பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குளியாபிட்டிய நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு வந்தபோது. குறித்த மூவரையும் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-3)

## செயலாற்றுகை விருது

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட மிகச்சிறந்த நுகர்ச்சிப் பிரிவை தெரிவு செய்யும் போட்டி மற்றும் மிகச்சிறந்த கிராமிய வங்கியைத் தெரிவு செய்யும் போட்டியில் வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ம-3)

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் 3 பரப்புக்காணியில் 4 அறைகளுடன் கூடியவீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 003 378 396 6868 Viber
077 671 2379, 077 618 3063 (9795)

# மண்டைதீவு வேப்பந்திடலில் இன்று கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இன்று முற்பகல் 11.00 மணிக்கு கொடி யேற்றம் இடம் பெறும். தொடர்ந்து பத்து தினங்கள்மகோற்சவம் நடைபெறும்.

மகோற்சவத்தை கல்வியங்காடு சிவஸ்ரீ முத்து ஸ்ரீநிவாசக் குருக்கள், கொக்குவில் நந்தாவில் சிவஸ்ரீ ந.குமரகுருபர சிவாச்சாரியார் ஆகியோர் நடத்திவைப்பர். (ம)

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கூலிக்கான கூறுவிலை கோரல்

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினால் பின்வரும் வேலைகளுக்குரிய கூலிக்கான கூறுவிலை கோரப்படுகின்றது. அதற்கான விண்ணப்பபடிவத்தினை பிரதான வீதி, சங்கானை எனும் முகவரியிலுள்ள சங்க தலைமை காரியாலயத்தில் மீளளிக்கப்படாத வைப்புப்பணம் ரூபா 500.00 செலுத்தி பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 15.08.2019 இற்கு முன்பு ஒப்படைக்குமாறு தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

**வேலைகளின் விபரம்**

1. கிளை இல. 60 கட்டப்பட்ட மதில் அகற்றுதல் மற்றும் புதிதாக அமைத்தல்.
2. சங்க தலைமைக்காரியாலய கூட்ட மண்டபம் அமைத்தல்.

தலைவர்,
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்,
பிரதான வீதி, சங்கானை. (9817)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பதவி வெற்றிடம்

எமது நிறுவனத்தில் இணைந்து வாழ்க்கையை புதிதாக எழுதுவதற்கு இதோ உங்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம். சர்வதேச நிறுவனம் ஒன்றில் அங்கத்தவராகும் வாய்ப்பு உங்களுக்கு கிடைத்துள்ளது.



- வயதெல்லை (20.- 60)
- கல்வித் தகைமை - G.C.E (A/L)
- வங்கி மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

வாழ்க்கையை வென்றிட, அதிகமான வருமானத்தை பெற்றிட, வாழ்க்கையில் மகிழ்ந்திட... இன்றே அழையுங்கள்.

**Note :** பகுதி நேர வேலையில் ஆர்வம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**62/6 Stanley Road, Jaffna.
T.P : 077 712 1868** (9815)



# ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்கும் நோக்கில்
# பதற்றமான சூழ்நிலையை உருவாக்க
# அமெரிக்கா தீவிர முயற்சி!

## விமல் வீரவன்ச பகிரங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் தடுக்க, இலங்கையில் மீண்டும் ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கவே அமெரிக்கா தீவிரமாக முயற்சித்து வருவதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பகிரங்கமாக குற்றம்சாட்டினார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குற்றம்சாட்டினார்.

'ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெற்றால் நிச்சயமாக தோல்வியடைவோம் என்பது அவர்களுக்குத் தெரியும்.

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்க, ரணில் விக்கிரமசிங்க எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார். ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, அவரால் களமிறங்க முடியாதுவிட்டால், கருஜெயசூரியவுக்கே அந்த வாய்ப்பை வழங்குவார்.

ஆனால், அடுத்து நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்காவுக்கு சார்பான தரப்பு ஆட்சியமைக்க முடியாது போய்விட்டால், அந்நாட்டின் முகாம்களை இலங்கையில் அமைக்க முடியாது போய்விடும்.


இதனை அமெரிக்கா நன்றாக அறிந்துள்ளது. எனவே, அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது இல்லாது செய்துவிட வேண்டும் என்பதே அமெரிக்காவின் நோக்கமாக இருக்கிறது.

இலங்கையில் கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி உருவான பதற்றமான சூழ்நிலையை மீண்டும் ஏற்படுத்துவதன் ஊடாக மட்டுமே தேர்தலை நடத்தாமல் தடுக்க முடியும். இதற்கு சஹ்ரான் போன்று இரண்டு மூன்று நபர்கள் இருந்தாலே போதும். இதற்காக வஹாப் அடிப்படைவாதத்தை மீண்டும் ஏற்படுத்தவும் அமெரிக்கா தயங்காது.

எனவே, அடுத்த இரண்டு - மூன்று மாதங்களுக்குள் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறாது என்று எம்மால் முழுமையாக நம்பிக்கை வைக்க முடியாது.

அப்படி நடந்தால், அப்பாவி முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, அனைவரும் ஒன்றிணைந்து அலரிமாளிகையை முற்றுகையிட தயாராகிக் கொள்ள வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாணவர்களின் பேரணி மீது கண்ணீர்ப்புகைத் தாக்குதல்



(கொழும்பு)

கொழும்பில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுப் பகல் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்ட பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் காரணமாக லோட்டஸ் வீதி தற்காலிகமாக மூடப்பட்டதுடன் குறித்த பகுதியில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டுள்ளது. (இ-7)

## விலகி வீடு செல்வதற்குள்
# மீண்டும் ஆளுநர்களாக மைத்திரி, கீர்த்தி ஜனாதிபதி முன் நேற்றுப் பதவிப்பிரமாணம்

(கொழும்பு)

ஆளுநர் பதவிகளை இராஜினாமா செய்திருந்த மைத்திரி குணரத்ன மற்றும் கீர்த்தி தென்னக்கோன் ஆகியோர் மீண்டும் ஆளுநர்களாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

நேற்றுத் திங்கட்கிழமை காலை இவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மைத்திரி குணரத்ன ஊவா மாகாண ஆளுநராகவும், கீர்த்தி தென்னக்கோன் மத்திய மாகாண ஆளுநராகவும் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர்.

அதேபோன்று தென் மாகாண ஆளுநராக ஹேமல் குணசேகரவும் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். (இ-7)





# மரண தண்டனை ரத்து தனிநபர் பிரேரணை சட்ட ரீதியானதல்ல

## ஜனாதிபதி எதிர்ப்பு

(கம்பஹா)

மரண தண்டனை இரத்துச் செய்யப்படவேண்டும் என நாடாளுமன்றத்தில் ஐ.தே.க.எம்.பியால் முன்வைக்கப்பட்டுள்ள தனிநபர் பிரேரணை சட்ட ரீதியானது இல்லை என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினார்.

சட்ட ரீதியற்ற பிரேரணைகளால் எனது தீர்மானத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது எனவும் தெரிவித்தார்.

மரண தண்டனையை இல்லாதொழிக்கவும் அதனோடு தொடர்புடைய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குமான சட்ட மூலம், நாடாளுமன்றில் கடந்த ஜூலை மாதம் 12ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட முன்வைத்த இந்தப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் வழிமொழிந்திருந்தார்.

மரண தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உறுதியாகவுள்ளார்.


குறிப்பாக போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடையவர்களுக்கே இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி உறுதியாகவுள்ளார்.

இதற்கு பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன தொடர்ந்தும் கடும் எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையிலேயே மரண தண்டனைக்கு எதிரான யோசனை நாடாளும்ன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஜனநாயக தேசிய முன்னணி இம்மாத இறுதிக்குள் உதயம்

## பிரதமர் ரணில் அறிவிப்பு



(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணி இம்மாத இறுதிக்குள் உதயமாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் 'ஜனநாயக தேசிய முன்னணி' கூட்டணிக்கான ஒப்பந்தம் நேற்றுத்திங்கட்கிழமை கைச்சாத்திடப்படும் என, ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது.

எனினும், கூட்டணி தொடர்பாக எழுந்த சர்ச்சை காரணமாக குறித்த நிகழ்வு மற்றுமொரு தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று முன்தினம் அறிவித்தது.

இந் நிலையில் இதுகுறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று வெளியிடப்பட்ட விசேட அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஏனைய அரசியல் கட்சிகள் இணைந்து உருவாக்கவுள்ள கூட்டணிக்கான ஒப்பந்தம் இம்மாத இறுதிக்குள் கைச்சாத்திடப்படும் எனவும் ரணில் சுட்டிக்காட்டினார்.

புதிய கூட்டணி ஒன்றை அமைப்பது குறித்த யாப்பில் காணப்படும் குளறுபடிகள் காரணமாக, கூட்டணி அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# நாதன் லயன் அபார பந்து வீச்சு ஸ்ரீவ் ஸ்மித் அபார துடுப்பாட்டம் இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸி

ஆஷஸ் தொடரின் முதலாவது போட் டியில் 241 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்தி ரேலிய அணி அபார வெற்றிபெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட தொட ரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா இடையே நடைபெறும் மிகப்பெரிய வரலாறு கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடர், கிரிக்கெட்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. மிகவும் பிரசித்தி பெற்ற இந்த ஆஷஸ் கிரிக்கெட் தொடர் தற்போது இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது.

இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி பர்மிங்ஹாமின் எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் டிம் பெய்ன் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங் ஸில் 284 ஓட்டங்கள் சேர்த்தது. அதிக பட்சமாக ஸ்மீவ் சிமித் 144 ஓட்டங்கள் குவி த்தார். ஸ்டுவர்ட் பிராட் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தொடர்ந்து முதல் இன்னிங்ஸை ஆடிய இங்கிலாந்து அணி 374 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ராரி பர்ன்ஸ் 133 ஓட்டங்கள் எடு த்தார். லயன், கம்மின்ஸ் தலா 3 விக் கெட்டுகளை எடுத்தனர்.

90 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2-ஆவது இன்னிங்ஸை ஆடிய அவுஸ்தி ரேலிய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 487 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடை நிறுத்தியது.



நட்சத்திர வீரர் ஸ்டீவ் சிமித் 142 ஓட்டங்கள் விளாசினார். மத்யூ வேட் 110 ஓட்டங்கள் சேர்த்தார். பென் ஸ்டோக்ஸ் 4 விக்கெட்டுகளைச் சாய்த்தார்.

இந்நிலையில், 398 ஓட்டங்கள் என்ற கடின இலக்குடன் 5-ஆம் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி களமிறங்கியது. ஆனால், 146 ஓட் டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 251 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படு தோல்வியைச் சந்தித்தது.

அபாரமாகப் பந்துவீசிய நாதன் லயன் 6 விக்கெட்டுகளைச் சாய்த்தார். கம்மின்ஸ் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இரு இன்னிங்ஸிலும் சதம் கண்ட ஸ்டீவ் சிமித், ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**சிமித்தின் சாதனைகள**

போட்டியின் இரண்டு இனிங்ஸ்களிலுமே ஸ்டீவ் சிமித் 275 ஓட்டங்களை பெற்றுள்ளார் (144 மற்றும் 131). இந்த ஓட்ட எண்ணிக்கையே சிமித் டெஸ்ட் போட்டி ஒன்றில் பெற்றுக் கொண்ட அதிகூடிய ஓட்டங்களாக பதிவாகியுள்ளது.

ஆஷஸ் டெஸ்ட் போட்டி ஒன்றில் இரண்டு இனிங்சிலும் சதம் விளாசிய 8ஆவது வீரர் என்ற பெருமையையும், 5 ஆவது அவு ஸ்திரேலிய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்துக்கு எதிராக இவர் பெற்றுக் கொண்ட 10 ஆவது சதம் இது என்பதுடன், அந்த அணி க்கு எதிராக ஆஷஸ் தொடரில் அதிக சதங்கள் அடித்த ஸ்டீவ் வோக்கை ஸமித் சமன் செய்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் சிமித் இந்த இரண்டு சதங்கள் ஊடாக மொத்தம் 25 சத ங்களை விளாசியுள்ளார். 119 இன்னிங்சில் இந்த மைல்கல்லை எட்டிய ஸ்டீவ் சிமித் குறைந்த இன்னிங்சில் 25 சதங்கள் அடி த்தவர்களின் வரிசையில் 2 ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

# மழை எங்கள் வெற்றியை தடுத்தது இப்படிச் சொல்கிறார் பொவேல்



இந்தியாவுக்கு எதிரான 2-வது டி20 கிரி க்கெட் போட்டியில் 20 ஓவர்கள் வீசி யிருந்தால் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம் என வெஸ்ட் இண்டீஸ் வீரர் தெரிவித் துள்ளார்.

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடை யிலான 2-வது டி20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலில் பேட்டிங் செய்த இந்தியா 20 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 167 ரன்கள் குவித்தது.

பின்னர் 168 ரன்கள் அடித்தால் வெற்றி இலக்குடன் வெஸ்ட் இண்டீஸ் களம் இற ங்கியது. அந்த அணி 15.3 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 98 ரன்கள் எடு த்திருந்தது. 27 பந்தில் 70 ரன்கள் தேவை என்ற நிலையில் மழை பெய்ததால் ஆட்டம் நிறுத்தப்பட்டு டக்வொர்த் லீவிஸ் விதிப்படி இந்தியா வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது.

இது வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு ஏமா ற்றம் அளித்தது. நாங்கள் 20 ஓவர்களும் பேட்டிங் செய்திருந்தால் வெற்றி பெற் றிருப்போம் என 34 பந்தில் 54 ரன்கள் குவித்த பொவேல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பொவேல் கூறுகையில் "எங்கள் கையில் போதுமான அளவு விக் கெட்டுகள் இருந்தன. பொல்லார்டு மற்றும் ஹெட்மையர் களத்தில் இருந்தனர். பிராத்வைட் மற்றும் கீமோ பால் ஆகியோர் பேட்டிங் செய்ய இருந்தனர். இவர்களால் நிச்சயம் இலக்கை எட்ட வைத்திருக்க முடியும்.

இந்தியா டக்வொர்த் லீவிஸ் விதிப்படி வெற்றி பெற்றது. நாங்கள் அதுகுறித்து சிந்திக்கவில்லை. ஏனென்றால், நாங்கள் மிகப்பெரிய வித்தியாசத்தில் பின்தங் கியிருந்தோம்" என்றார்.

# இருபதுக்கு இருபது போட்டிகளில் ராஜாவானார் ரோகித் சர்மா




டி20 கிரிக்கெட்டில் அதிக சதம், அதிக சிக் ஸர்கள் உட்பட அனைத்து சாதனைக ளையும் தன்வசப்படுத்தினார் ரோகித் சர்மா.

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் இடை யிலான 2-வது டி20 கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ரோகித் சர்மா 6 பவுண்டரி, 3 சிக்சருடன் 51 பந்தில் 67 ரன்கள் குவித்தார். இதன் மூலம் பல்வேறு சாதனைகளை படை த்துள்ளார்.

டி20 கிரிக்கெட்டில் 2422 ரன்கள் சேர்த்து அதிக ரன்கள் குவித்த பேட்ஸ்மேன் என்ற சாதனையைப் படைத்துள்ளார். 107 சிக்ஸ் மூலம் அதிக சிக்ஸர்கள் விளாசிய பேட்ஸ்மேன் என்ற பெருமையை பெற் றுள்ளார்,

21 முறை 50 ரன்களுக்கு மேல் அடித்து, அதிக முறை 50 ரன்களுக்கு மேல் அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார். நான்கு சதங்களுடன் அதிக சதங்கள் அடித்த வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.



நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கொடிச்சீலை நேற்றுக்காலை ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டது. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் நடைபெறும். சட்டநாதர் கோவிலை அண்மித்துள்ள வேல் மடம் முருகன் கோவிலில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற விஷேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து, அங்கிருந்து சிறு தேரில் கொடிச்சீலை நல்லூர் ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டு ஆலய பிரதம குருக்களிடம் வழங்கப்பட்டது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## யாழ்.மாநகர சபையால்

# நல்லூரில் 3 இலட்சம் ரூபா செலவில் 8 சோதனைக் கூடங்கள் அமைப்பு



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் நிலையில் ஆலயத்துக்கு வரும் பக்தர்களை சோதனைக்குட்படுத்தி அனுமதிப்பது தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் நேரில் ஆராய்ந்தனர்.

அடியவர்களைச் சோதனைக்குட்படுத்தி அனுமதிப்பதற்கு வசதியாக யாழ்ப்பாணம் மாநகர சபையால் 3 இலட்சம் ரூபா செலவில் 8 சோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதும் மேலதிகமாக 4 கூடங்கள் தேவை எனப் பொலிஸாரால் கோரப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்தத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 நாட்கள் இடம்பெறும்.

இம்முறையும் பல இலட்சம் அடியவர்கள் நல்லூரில் திரள்வர். வழமை போன்று வீதி மறியல்கள் போடப்பட்ட போதும் கடந்த ஏப்ரல் 21 பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக சோதனைக் கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் 3 லட்சம் ரூபா செலவில் 8 சோதனைக் கூடங்கள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

இந்த நிலையில் எந்தெந்த இடங்களில் சோதனைக் கூடங்களை அமைத்து அடியவர்களை சோதனை செய்வது தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நேரில் ஆராய்ந்தனர்.

அவர்களுடன் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறியியலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இதன்போது தமக்கு மேலதிகமாக சோதனைக் கூடங்கள் தேவைப்பட்டால், அவற்றை அமைத்துத் தருமாறு பொலிஸாரால் கோரப்பட்டது. குறிப்பாக 12 சோதனைக் கூடங்கள் அவசியம் என்றும் இதன்போது பொலிஸ் அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-7)

# சுய நலத்திற்காக ஐ.தே.கவுடன் சு.க.உறுப்பினர்கள் இணைந்தால் அது பாரிய துரோகமாகும்



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் கூட ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் ஒருபோதும் செல்ல மாட்டார்கள் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு தரப்பினர் சுயநல தேவைகளுக்காக மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்தால் அது கட்சிக்கு செய்யும் பாரிய துரோகமாகும் என்றும் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகிய இரு தரப்பின் உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்துகொள்ள இருப்பதாகவும், அவர்கள் விடுத்த கோரிக்கைகளுக்கு அமையவே ஒப்பந்தம் கைச்சாத்திடல் பிற்போடப்பட்டது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான ஹரிசன் குறிப்பிட்டுள்ளமை வேடிக்கையாகவுள்ளது.

தற்போது ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற போட்டி ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. கட்சியின் உள்ளக பிரச்சினையே ஐக்கிய தேசியக் கட்சியை பலவீனப்படுத்தும் என்றும் மகிந்தானந்த தெரிவித்தார். (இ-7)

## இராசி பலன்

**மீனம்** — சிறப்பாக பணிகளைச் செய்து குடும்ப பெரியவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**மேடம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர் கள், முன்னேற்றத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், செய்தொழிலில் மேன்மையுண்டு.

**இடபம்** — பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், எதிர்கால நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொழில் வளர்ச்சியுண்டு, புண்ணிய காரியங்களுக்காக செலவு செய்வீர்கள்.

**மிதுனம்** — புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம் பாராட்டும் புகழும் கூடும் நாள், நினைத்த காரியங்கள் நிறைவேறும் நாள்.

**கும்பம்** — பொது வழியில் வீண்பழி கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம், தொழிலில் கவனம் தேவை.

இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரட்டாதி<br>மாலை 5.10 மணிக்கு<br>துலாம்-சந் | | சூரி, புத, செவ், சுக் |
| | | | |
| சனி, கேது | குரு | | சந் |

**06.08.2019**

ஆடி 21, செவ்வாய்கிழமை

சூரிய உதயம் காலை 5.56 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 7.23 மணிவரை

சித்திரை பின்னிரவு 4.33 மணிவரை

சுபநேரம் 10.34-12.04 மணிவரை

இராகுகாலம் 3.04-4.34 மணிவரை

நல்லூர் கந்தன் கொடியேற்றம்

சஷ்டி விரதம்

வளவன்

**கடகம்** — உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படலாம், தடைப்பட்ட காரியங்கள் தனாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்** — பகையொன்று நட்பாகலாம், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொழில விருத்தி செய்ய முற்படுவீர்கள், அன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** — வெளியூர் பயணங்களால் நன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**தனுசு** — தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் மனம்போல் நடந்து கொள்வர், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பொது வழியில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**விருச்சிகம்** — உள்ளம் மகிழும் செய்தியொன்று வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன நன்மையுண்டு.

**துலாம்** — உறவினர்கள் உதவி செய்ய முற்படுவர், மன அமைதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம், சுப விரயங்கள் கூடும்.

**கன்னி** — பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், குடும்பத்தினர் .... நடந்து கொள்வது நல்லது, கற்பனை மிகுதியான நாள்.

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

## கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா

### ஆரம்ப நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் முன்னெடுக்கப்படும் "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா-2019" நிகழ்வின் ஆரம்ப நாள் நிகழ்வு மாலை 6.30 மணியளவில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் திருமுன்னிலையில் இடம்பெறும்.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள நிர்வாக உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் சா.சுதர்சன் பிரதம விருந்தினராகவும் மன்னார் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஸ்ரீவர்ணன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பார்.

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, வேதபாராயண அறநெறிப் பாடசாலை மற்றும் கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கலை நிகழ்வுகளும் கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசனின் "கந்தபுராண வாழ்வியல்" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

சிறப்புச் சொற்பொழிவின் போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோருக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.

உற்சவகால நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டப வயலின் இசை ஆசிரியை செல்வி சு.நிரஞ்சலாவின் நெறி யாள்கையில், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டப மாணவிகள் வழங்கும் வயலினிசைக் கச்சேரியும் இடம்பெறும். (இ-7)

# மதப் பிரசாரங்களுக்கு பிரதேச செயலக அனுமதியைப் பெற வேண்டும்

## சங்கானைப் பிரதேச செயலர் உத்தரவு

(சங்கானை)

சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் மதப் பிரசாரம் செய்வோர் கிராம உத்தியோகத்தர் ஊடாகப் பிரதேச செயலகத்தின் அனுமதியைப் பெற்றே நடத்த வேண்டுமெனச் சங்கானைப் பிரதேச செயலாளர் உத்தரவிட்டுள்ளார்.

பொன்னாலை-மூளாய்ப் பகுதியில் இந்திய வீட்டுத்திட்டப் பயனாளி ஒருவரின் வீட்டில் கிறிஸ்தவ மதப் போதனைகள் இடம்பெற்றுவருவதாகவும் இந்துக்கள் அதிகமாக வாழும் குறித்த பிரதேசத்தில் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அப் பகுதி மக்களால் தமக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றதாகத் தெரிவித்தார்.

குறித்த இந்திய வீட்டுத் திட்டத்தை மதப் போதனைக்காக விற்பனை செய்யப்பட்டதாகப் பரவும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை எனவும் குறித்த வீட்டு உரிமையாளர் தற்காலிகமாக பிறிதொரு பகுதிக்குச் சென்ற நிலையில் குறித்த வீடு மதப் போதனைக்காக வழங்கப்பட்டுள்ளது எனப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

எனவே தமது பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின் சமய விழுமியங்களை தான் மதிப்பதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான எதிர்மறையான விடயங்கள் இடம்பெறாவண்ணம் இருக்க மதப் போதனைக் குழுக்கள் பிரதேச செயலக அனுமதியைப் பெற வேண்டும் என பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (5-10)

# குக்கர் வெடித்ததில் காயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி மரணம்

(கரணவாய்)

மண்ணெண்ணெய்க் குக்கர் வெடித்து சிதறியதில் படுகாயமடைந்த இளம் குடும்பப் பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சுதாகரன் ஜெயராணி (வயது-38) என்பவரே மரணமடைந்தவராவார்.

கடந்த மாதம் 16 ஆம் திகதி மண்ணெண்ணெ குக்கரில் சமைத்துக் கொண்டிருந்த போது மண்ணெண்ணெய் முடிவடைந்த நிலையில் அப்படியே மண்ணெண்ணெயை நிரப்ப முற்பட்ட போது குக்கர் வெடித்து சிதறியதாகக் கூறப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (5-60)



யாழ்.வண்ணை வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான நாகசதுர்த்தி உற்சவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க்கந்தன் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இதில் முதலாம் நாள் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் ஆசியுரையை செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார்.

இதில் நாதஸ்வரம் பி.எஸ். ஜெய சங்கர், பி.எஸ்.பி.சாரங்கன், தவில் கே.எஸ்.பிரபா, யு. ஜெயந் தன் ஆகியோர் கலந்து கொள் வர். (இ-7)

# பெருந்திருவிழா விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண் வடமேற்கு-பிரப்பம்பதி ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி ஸ்ரீ ஞானவைரவர் ஆலய பெருந்திருவிழா விஞ்ஞாபனம் இன்று முற்பகல் 10.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் சப்பறத்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10.30 மணியளவில் தேர்த்திருவிழாவும் 15 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (இ-5)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை வட மேற்கு-பிரப்பம்பதி ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமான் தான்தோன்றி ஸ்ரீ ஞான வைரவர் ஆலயப் பெருந்திருவிழா இன்று 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 தினங்கள் நடைபெறும்.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேரில் ஆரோகணித்தலும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (5)

# ஏ-9 வீதியில் எழுதுமட்டுவாழ் பகுதியில் விபத்து; கனரக வாகனச் சாரதிக்கு காலில் காயம்

(சாவகச்சேரி)

ஏ-9 வீதியில் தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் கனரக வாகனச் சாரதி காலில் படுகாயமடைந்தார்.

யாழிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த கனரக வாகனம் எழுதுமட்டுவாழ் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து தடம்புரண்டு விபத்திற்குள்ளாகினது.

கனரக வாகனச் சாரதியான புத்தூர் வடக்கு புத்தூரைச் சேர்ந்த 30 வயது இ.ரகீதன் காலில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (இ-30)




# விளையாட்டு விழா

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் தொட்டிலடி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் சி.நந்தீஸ்வரன் கலந்து கொள்வார். (5-110)

# தென்மராட்சியில் குளவிக்கூடு தீயணைப்புப் பிரிவால் அழிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் டச் வீதியில் டிபேர்க் பாடசாலை மற்றும் பூமாரி திருமண மண்டபம் ஆகியவற்றுக்கு மிக அருகாமையில் மரமொன்றில் காணப்பட்ட மலைக் குளவிக்கூடு எரித்து அழிக்கப்பட்டது. டிபேர்க் பாடசாலை அதிபர் மற்றும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் ஆகியோரின் முயற்சியால் யாழ்.மாநகர சபை தீயணைப்புப் படையினரின் உதவியுடன் கடந்த சனிக்கிழமை இரவு இந்தக் குளவிக்கூடுகள் எரித்து அழிக்கப்பட்டன.

டிபேர்க் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை ஆகியன இடம்பெறுவதனால் மாணவர்களின் நலன்கருதி முன்கூட்டியே ஆபத்தை விளைவிக்கக்கூடிய குளவிக் கூடுகள் அகற்றப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளனர். தற்போது கடும் காற்றுடன் கூடிய காலநிலை காணப்படுவதால் தென்மராட்சியின் பல பாகங்களிலும் மலைக் குளவிகளின் தாக்குதல் அதிகரித்துக் காணப்படுகிறது.

கடந்த வாரம் சாவகச்சேரி - மட்டுவில் பகுதியில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் மலைக் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபமாக மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. குறித்த மலைக் குளவிகள் கட்டடங்களிலும் உயர்ந்த மரங்களிலும் கூடு அமைக்கும் வல்லமை கொண்டவையாகக் காணப்படுகின்றன. (5-30)



செல்வச்சந்நிதி சித்தர் மடம் மறைந்தனவும் மறைக்கப்பட்டனவும் ஓர் ஆய்வு நூல்வெளியீட்டு விழா சைவப்புலவர் பொன்.சுகந்தன் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்களாக ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், கரவெட்டி உதவி பிரதேச செயலாளர் சிவகாமி உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:-மகாலிங்கம்)

# மண்கும்பானில் மதுரகவிக்கு ஆளுமைக்கான கௌரவ விருது





சைவத்தமிழுலகில் ஆன்மீகச்சுடராக, சர்வதேச ஒலிபரப்பாளராக, ஜீதய்வீகப் பேருரையாளராக, சமயப் பிரசாரகராக, பிரபல கட்டுரையாளராக சமய, சமூக, கலை இலக்கிய வானொலி, தொலைக்காட்சி நேர்முக வர்ணனைகளை 45 ஆண்டுகளாக அசத்திவரும் திருவருட்கவி, கவியரசு, கவிமாமணி, மகாகவி சாகரம், செஞ்சொல்ஞானவாரிதி, சிவநெறித்தொண்டர், தெய்வீக ஞானத்தமிழருவி, சமூக திலகம், தேசோதய தீபம்,

## வர்ணனைக் கலாநிதி.மதுரகவி .காரை எம்.பி.அருளானந்தன் M.A, J.P

(ஆசிரியர், யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) பணிப்பாளர் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவை,

(பிரதம நேர்முக வர்ணனையாளர் DAN T.V, ஓம் T.V)



அவர்களின் இதயத்தை வருடும் இன்குரலால் இறைவனிடம் எம்மை அழைத்துச் செல்லும் ஆளுமை மிக்க அருட்பணி ஆற்றும் தன்னலமற்ற சேவையில் 45 வது ஆண்டை சிறப்பிக்கும் முகமாக மண்கும்பானூர் கன்னன் (சண்முகம்-ஜெகதீஸ்வரன், புதிய நதியா நகைமாடம்) அவர்களின் ஒழுங்கமைப்பில் நடாத்தப்பட்ட வெளியீட்டு விழாவில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம்-வேதநாயகன் அவர்கள் மதுரகவிக்கு ஆளுமைக்கான கௌரவ விருதினை வழங்குகின்றார்.புதிய நதியா நகைமாட முதல்வர் ச.ஜெகதீஸ்வரன் தங்கப்பதக்கம் அணிவித்து கௌரவிக்கின்றார்.


ஆளுமைக்கான கௌரவ விருது பெறும் மதுரகவியை வாழ்த்தி மகிழ்வோர்

**S.V.MURUGESU**

இல.154, Hospital Road Jaffna

உரிமையாளரும் மு.குணரத்தினம் அவர்களும் நிறுவனத்தில் பணி கொள்வோரும்



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 2செவ் 7இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L, Swiss<br>எதிர்பார்ப்பு:A/L (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/9957 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1கி.பா: 59செவ் 8ல் உயரம்: 168cm<br>தகைமை/தொழில்: BCS & Engineering, Germany<br>எதிர்பார்ப்பு: தகைமைக்கேற்ப(வெளிநாடு)<br>தொ.இ: G/9988 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1 உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: M.Sc, Senior Software Developer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி,சைவபோசனம் (உள்நாடு)<br>தொ.இ: B/9959 | பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 3 உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: A/L மணமகள் விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: G/9991 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 78 செவ் 4இல் உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBBS, Medical Officer<br>எதிர்பார்ப்பு: Doctor, Dentist, Accountant, Engineer, IT &B.Scபட்டதாரி(உள்நாடு)<br>தொ.இ: B/9960 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 22 ½ உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:BA, PGDE Following, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் (உள்நாடு,வெளிநாடு).<br>தொ.இ: G/9993 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2 உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MA, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: A/L, பட்டதாரி சைவபோசனம். அசைவமும் ஏற்கப்படும் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/9961 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 41 ¾ செவ் 12இல் உயரம்:5'3"<br>தகைமை தொழில்: B.Sc, அரச தாதி<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார்தொழில் (உள்நாடு)<br>தொ.இ: G/9996 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



யாழ் - திருவண்ணை - கன்னாதிட்டி

## அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

இல-100,
கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

### உதவி ஐயர், பல வேலையாளர் தேவை

எம்து ஆலயத்திற்கு உதவி ஐயர் ஒருவரும், பல வேலையாளர் ஒருவரும் புதிதாக நியமிக்கவுள்ளோம்.எனவே த்ங்களது சுயவிபரங்களை குறிப்பிட்டு மேற்குறிப்பட்ட விலாசத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஊதியம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(9810) நிர்வாகம்.


# வெற்றியடையக்கூடிய வேட்பாளருக்கே ஆதரவு

## றிசாத் உறுதி



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடையக் கூடிய வேட்பாளருக்கே நாம் எமது ஆதரவை வழங்குவோமென அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுகிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"2010 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவுக்கு எமது ஆதரவை வழங்கினோம் அவர் வெற்றிபெற்றார்.


அதேபோன்று 2015 ஆம் ஆண்டு மைத்திரிபால சிறிசேனவுக்கு எங்களது ஆதரவை வழங்கினோம்.

அந்தவகையில் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றியடையக்கூடிய வேட்பாளருக்கே ஆதரவு வழங்குவோம்" என றிசாத் மேலும் தெரிவித்தார். (இ-7)

# சுட்டும் முகநூல் 04

**Babugi Muthulingam**
12 hrs

நல்லூர் பெருமானே இதுவும் உந்தன் திருவிளையாடலோ?
உன்னைக் காண வரும் நான்கு பக்கமும் சோதனைச் சாவடிகள்
நீ இருக்க இவை எதற்கு எமக்கு?
வேதனையோடு வருபவர்களுக்கு சோதனையா!



**Nathan Siva**
August 1 at 2:02 PM

கீழ்நிலை உழைப்பிலுள்ளவர்கள் பட்டதாரி நியமனம் கிடைத்ததும் அதனைக் கோரி நிற்பதொன்றும் பெருங்குற்றமல்ல என நான் கருதுகிறேன். அது அவரவர் விருப்பம்.ஆனால் அவர்கள் தொடர் சேவையாக கோர முடியாது என்று குறிப்பிட்டால் அது நியாயமாக கொள்ளலாம். அதை விடுத்து ஏற்கனவே அரச சேவையில் இருப்பவர்கள் பட்டதாரி நியமனத்திற்கு முறைகேடாக கோரியது போல் "சிக்கினார்கள்" என்று ஏதோ பயங்கரவாதிகளை விளிப்பது போல் குறிப்பிடுவதெல்லாம் மிக மோசமான செய்தி வெளிப்பாடு. வேறு வேலை கிடைக்கவில்லை என்று அலுவலகப் பணியாளராக சேர்ந்த ஒருவர் பட்டதாரியாக இருந்தாலும் இறக்கும் வரை அதே பணியில் இருந்தே இறந்து விட வேண்டும் என்பதா இன்றைய அரசின் கொள்கை.

**கவி நிலா**
Yesterday at 9:54 AM

நாமலின் அறிக்கை சில உண்மைகளை கூறலாம். ஆனால் இவையனைத்தும் நம் மக்கள் அறியாதவையல்ல. ஆயினும் எங்களது விடயங்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் ஆடுகளாய் எமையெண்ணி ஓநாய் தனமாக கண்ணீர் சிந்தி பாசாங்கு செய்ய வேண்டாம். எமக்கு இதுவரை இலங்கை தீவில் அதிகாரத்தில் இருந்த மற்றும் இருக்கத் துடிக்கும் அனைவரும் ஒன்று தான். சிங்கள பேரினவாதம் ஒருபோதுமே எமை ஆத்மார்த்தமாய் அணைக்காது என்பதில் தெளிவாக இருப்போம்.



**Warna Danish**
Yesterday at 9:12 AM

புலமைப்பரிசில் பரீட்சையை ஒழித்து
சின்ன மாணவச் செல்வங்களை
காப்பாற்றுவோம்.
பெற்றோரின் பெருமைக்காகவும்
சில ஆசிரியர்களின்
வருமானத்திற்காகவும்
பிஞ்சு உள்ளங்களை
ஏன் வதைக்க வேண்டும்?
வேண்டாம் இந்தச் சோதனை.

**Arunthavam Janojan**
August 1 at 12:14 PM

மூன்று வருடமாகப் போராடிக் கொண்டிருக்கும் தாய்மாருக்கு எந்தத் தீர்வுமில்லை.
ஆறுதலுமில்லை. ஒரு அரசாங்கத்திற்கு வழங்கிய காலமும் முடியப்போகிறது.



OORUKAI.COM
போராடி ஓய்தலே வாழ்வா?

**அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.**

# தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை

## சுமந்திரன் சுட்டிக்காட்டு



(திருகோணமலை)

**ஆட்சி மாற்றத்தின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்த்த விடயங்கள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஆட்சி மாற்றத்தின் ஊடாக தமிழ் மக்கள் எதிர்பார்த்த பல விடயங்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவைகளும் முழுமை பெறவில்லை.

ஆனால் எவையும் இடம்பெறவில்லையெனக் கூற முடியாது. காணி விடுவிப்பு. கைதிகள் விடுதலை ஆகிய. விவகாரங்களில் முழுமையாக இல்லாதுவிட்டாலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று அரசியலமைப்பு விடயத்திலும் ஒரு யாப்பு வரையப்பட்டு இறுதிக் கட்டத்தை எட்டிய நிலையிலுள்ளது" என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

கூரிய ஆயுதத்தால் தாக்குதல்.

# தம்புள்ள நகர சபையின் மகிந்த அணி உறுப்பினர் கைது

(தம்புள்ள)

தம்புள்ள நகர சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் (மகிந்த அணி) உறுப்பினர் அநுர பண்டார கைது செய்யப்பட்டார். கூரிய ஆயுதத்தால் தாக்குதல் மேற்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே நேற்று திங்கட்கிழமை அதிகாலை இவர் கைது செய்யப்பட்டார்.

இவரின் தாக்குதலில் காயமடைந்த ஜலாச வீதியைச் சேர்ந்த 35 வயது நலின் ஜயரத்ன பெரேரா என்பவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடும்பத் தகராறு காரணமாகவே இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக தம்புள்ள பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# வெள்ளவத்தையில் கடும் மோதல் 3 பொலிஸார் உட்பட 6பேர் காயம்

(வெள்ளவத்தை)

கொழும்பு வெள்ளவத்தையில் இடம்பெற்ற கடும் மோதலில் ஆறு பேர் காயமடைந்தனர்.

வெள்ளவத்தை மயூரா பிளேஸ் பகுதியில் நேற்று முன்தினம் இரவு ஞாயிற்றுக்கிழமை இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாகவே இந்த மோதல் இடம்பெற்றது.

இதன்காரணமாக குறித்த பகுதியில் சற்று பதற்றமான சூழல் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது ஆறு பேர் காயமடைந்ததாகவும், மூன்று பொலிஸ் அதிகாரிகளும் இதில் உள்ளடங்குவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குறித்த பகுதியில் ஏற்பட்டிருந்த அமைதியின்மையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் உட்பட பொலிஸார் ஒன்றிணைந்து கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சீனாவுக்கு அனுப்பிய ரேடர் கருவிகள் மாயம்

## விமானப்படை அதிகாரிகள் அதிர்ச்சி

(கொழும்பு)

**கடந்த 2014 ஆம் ஆண்டு திருத்த வேலைகளுக்காக இலங்கை விமானப்படையால் சீனாவுக்கு அனுப்பப்பட்ட ரேடர் ரிசீவர் மற்றும் அன்ரெனா ஸ்கானர் கருவிகள் மாயமாகியுள்ளதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில் இருந்து தெரியவந்தது.**



நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுவுக்கு, விமானப் படையின் சட்டப்பணிப்பாளர் அனுப்பிய கடிதம் ஒன்றிலேயே இந்தத் தகவலை வெளியிட்டார்.

தொலைந்து போன கருவிகளின் பெறுமதி 98 மில்லியன் ரூபா என்றும் இவை எவ்-7 போர் விமானத்தில் பொருத்தப்பட்டிருந்தவை என்றும் விமானப் படை சட்டப் பணிப்பாளர் சுட்டிக் காட்டினார். இவை ஏதாவதொரு தீவிரவாதக் குழுவின் கையில் சிக்கினால், தேசிய பாதுகாப்புக்கும் உலக பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் எச்சரித்தார்.

இந்தச் சம்பவம் இலங்கை விமானப் படையின் நற்பெயரையும் கெடுக்கும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு அண்மையில் எழுப்பியிருந்த கேள்வியையடுத்தே விமானப்படை இந்த விபரங்களை வெளியிட்டது.

குற்ற விசாரணைத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு, உள்ளூர் சரக்கு அனுப்புநரான எம்/எஸ் கெயார் லொஜிஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் அந்தக் கருவிகள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

நிறுவனத்தின் இணையத்தள இலக்கங்களுடன் தொடர்பு கொள்வதற்கான முயற்சிகள் தோல்வியடைந்தன.'

இலங்கை ஏற்றுமதியாளர் சபையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்த, அந்த நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளரின் தொலைபேசி இலக்கமும் இயங்கு நிலையில் இல்லை.

இதைவிட, இலங்கை விமானப்படையின் வெளிநாட்டு பழுதுபார்ப்பு மற்றும் சேவைகள் பிரிவு இவற்றை அனுப்புவதற்கு முன்னர் காப்புறுதி கொள்கையை பின்பற்றத் தவறிவிட்டது என்றும் தெரியவந்தது. இதனால், விமானப்படையால் காப்புறுதி மூலம் இழப்பை ஈடு செய்யவும் முடியவில்லை.

மிக் 21 போர் விமானத்தின் மறுவடிவமான எவ்-7 போர் விமானத்தை சீனா தயாரிக்கிறது. இதனால் பழுதடைந்த ரேடர் ரிசீவர் மற்றும் அன்ரெனா ஸ்கானர் ஆகியன எம்/எஸ் கெயார் லொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்தின் மூலம் பழுது பார்ப்பதற்காக சீனாவுக்கு அனுப்பப்பட்டன.

இந்தக் கருவிகளின் பெறுமதி 536,000 டொலர் ஆகும். இவற்றை பீஜிங்கிற்கு அனுப்புவதற்கும் இலங்கை விமானப்படை மில்லியன் கணக்கான ரூபாக்களை செலுத்தியது.

உள்ளூர் சரக்கு அனுப்புநர் இந்தக் கருவிகள் அடங்கிய பொதியை 2014 ஏப்ரல் மாதம் எயர் ஏசியா சரக்கு பிரிவில் கையளித்தார். கோலாலம்பூர் வழியாக சீனாவுக்கு அனுப்ப திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தக் கருவிகள் அடங்கிய பொதி சீனாவில் ஒப்படைக்கப்பட வேண்டிய இடத்தைச் சென்றடையவில்லை.

இதுகுறித்து, தொடர்ச்சியாக உள்ளூர் சரக்கு அனுப்புநரிடம் விசாரித்த போதும் திருப்திகரமான பதிலை விமானப்படைக்கு வழங்கவில்லை.

இந்தக் கருவிகள் காணாமல் போய், ஒரு ஆண்டு கழிந்த நிலையில், 2015 ஜூன் மாதம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என விமானப்படையின் சட்ட பணிப்பாளர், சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டிருந்தார்.

காணாமல்போன பொதியைக் கண்டுபிடிக்க, கோலாலம்பூரிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் உதவியையும் விமானப்படை நாடியது. எனினும், அவர்களாலும் கண்டறிய முடியவில்லை.

கோலாலம்பூருக்கும் இறுதி இலக்கான சீனாவுக்கும் இந்தக் கருவிகளை அனுப்ப விமானப் போக்குவரத்து வசதியை முன் பதிவு செய்திருந்ததை விமானப் படை தனது தடய முறையில் இருந்து கண்டறிந்தது. ஆனால் அந்தப் பொருட்கள் அந்தந்த இடங்களுக்கு விமானத்தில் ஏற்றப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை.

இந்தக் கருவிகளைக் கண்டு பிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்தன. ஏனெனில் சரக்கு அனுப்புபவர் சரக்குகளை தவறாக வைத்திருப்பதற்கு எந்தவொரு சரியான காரணத்தையும் தெரிவிக்கவில்லை.

காப்புறுதி மூலம் இழப்பீடு வழங்க மட்டுமே ஒப்புக் கொண்டது. ஆனால் விமானப் படை இதை நிராகரித்தது, ஏனெனில் இது இழப்பீட்டுத் தொகை, அதன் உண்மையான மதிப்பை விட மிகவும் குறைவானது.

காணாமல்போன கருவிகள் எந்தவொரு பயங்கரவாதக் குழுவிடமும் கிடைத்தால் தேசிய பாதுகாப்பு மற்றும் உலகளாவிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடும், இதுபோன்ற சம்பவம் நிகழ்ந்தால் அது விமானப்படையின் பெயரைக் கெடுக்கக் கூடும் என்று குற்ற விசாரணைப் பிரிவிடம் முறைப்பாடு செய்யுமாறு விமானப்படைக்கு சட்டமா அதிபர் பரிந்துரைத்திருந்தார்.

அனுப்புநருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விமானப்படைக்கு அறிவுறுத்தப்பட்டது.

இதற்கமைய, குற்ற விசாரணைப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணை அறிக்கை இப்போது மேலதிக நடவடிக்கைகளுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டது.

விமானப்படை நீதிமன்றத்தில் இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு, இழப்பீட்டை எடுக்கத் தவறிய அதிகாரியிடமிருந்து 493,438.38 ரூபா (காணாமல் போன பொருட்களின் மொத்த மதிப்பில் ஐந்து சதவீதம்) வசூலிக்க விமானப் படைத் தளபதி பரிந்துரைத்தார்.

மீதமுள்ள 98,194,092.87 ரூபாவை எம்/எஸ் கெயார் லொஜிஸ்டிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து கோர வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இதையடுத்து, இந்த நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் வைக்கவும் வேறு எந்த அரசு நிறுவனங்களும் இதனுடன் பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதற்கு தடை விதித்தும் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு உத்தரவிட்டதாக பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது. (இ-7)

# சர்ச்சைக்குரிய சிறுகதை எழுத்தாளருக்குப் பிணை



(கொழும்பு)

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்ட சிறுகதை எழுத்தாளர் ஷக்தி சத்குமாரவுக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை குருநாகல் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே அவரை பிணையில் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

பேஸ்புக்கில் சிறுகதை ஒன்றை பதிவிட்டதன் மூலம் பௌத்த பிக்குமாரை விமர்சித்தாரென சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆதரவு சர்வதேச உடன்படிக்கையின் (ICCPR) கீழ் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி இவர் கைது செய்யப்பட்டார்.

இருப்பினும் அவரது கைது தொடர்பாக சர்வதேச மன்னிப்பு சபை உட்பட மனிதவுரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்திருந்ததுடன், அவரை விடுதலை செய்யுமாறும் கேட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சர்வதேசம் ஏற்றுக்கொள்ளும் ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும்

## ஹக்கீம் கூறுகிறார்



(கொழும்பு)

சர்வதேசம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும், ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க வேண்டும் என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றை அடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'நாம் ஐக்கிய தேசிய முன்னணியின் கொள்கைகளை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்தாலும், அடுத்த ஜனாதிபதி தேர்தல் என்று வரும்போது இது தொடர்பாகசிந்தித்துபார்க்கவேண்டும்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பாக பல்வேறு விடயங் களைச் சிந்திக்க வேண்டியுள்ளது. அது மிகவும் முக்கியமான ஒன்றாகவே கருதப்படுகிறது. இது தொடர்பாக எல்லாம் ஆராய்ந்த பின்னர், வேட்பாளரை அறிவிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கிறது.

விசேடமாக, களமிறங்கவுள்ள வேட்பாளரின் கொள்கைகள் தொடர்பாக ஆராய வேண்டும்.

அத்துடன், அவரை மக்கள் ஏற்றுக்கொள்வார்களா? என்பதையும் சிந்திக்க வேண்டும். ஜனாதிபதி என்பவர் சர்வதேச ரீதியாகவும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவராக இருக்க வேண்டும்' என ஹக்கீம் தெரிவித்தார். (இ-7)

# உயர்தரப் பரீட்சை எழுதிய இராஜாங்க அமைச்சர் ரஞ்சன்



(கொழும்பு)

பெருந்தெருக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர், ரஞ்சன் ராமநாயக்க, நேற்று உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினார்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர கோட்டே பிரதேசத்திலுள்ள ஆனந்த பாலிகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட, பரீட்சை மத்திய நிலையத்திலேயே அமைச்சர் ரஞ்சன் பரீட்சை எழுதினார். (இ-7)

## மன்.மடுத்திருத்தல திருவிழா இன்று ஆரம்பம்

# வாகனங்களில் வரும் பக்தர்கள் பெயர்ப்பட்டியலை எடுத்து வருமாறு பொலிஸார் கோரிக்கை

(மன்னார்)

மடுத்திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவிற்கு வரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு பொலிஸார் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா இன்று மாலை 5.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

அதனைத் தொடர்ந்து நவநாள் திருப்பலிகள் இடம்பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருநாள் திருப்பலியைக் கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கவுள்ளனர்.

இந்த நிலையில் மடுத் திருத்தலத்திற்கு வரும் பக்தர்களின் நலனைக் கருத்தில் கொண்டு சகல விதமான ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளது. மடு திருத்தலத்திற்கு குடும்பங்களாக வாகனங்களில் வரும் பக்தர்கள் தமது பெயர் விபரங்களை பட்டியலிட்டு மடுத் திருத்தல நுழைவாயிலில் சோதனையில் ஈடுபடும் பொலிஸாருக்கு வழங்குமாறு பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பட்டியல் வழங்குவதன் மூலம் சோதனைகளை குறைத்துக்கொள்ள முடியும் எனவும் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் தெரிவித்துள்ளார். மேலும் பக்தர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பொலிஸ் மற்றும் இராணுவம் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-285)




# முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு இறங்குதுறைகள் அபிவிருத்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோர மீனவர்களின் தொழில் தொடர்பான வசதிவாய்ப்பினை பெருக்கும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் ஆறு இறங்கு துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான பணிகள் முன்னெடுப்பதற்கு அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப்பணிப்பாளர் கலிஸ்ரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரையோரப் பகுதிகளில் மீனவர்களின் தொழில் விருத்தியினை கருத்தில்கொண்டு அடிப்படை வசதிகளை பெருக்கிக்கொள்ளும் நோக்கில் தெரிவு செய்யப்பட்ட ஆறு இடங்களில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மாத்தளன், கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு, தீர்த்தக்கரை, சிலாவத்தை, கொக்குளாய் போன்ற கரையோர பகுதிகளில் மீனவர்களுக்கான எரிபொருளினை பெற்றுக் கொள்ளல், ஓய்வு மண்டபம், வலை இயந்திரங்கள் திருத்த கட்டம், மலசலகூடம், வாகன நிறுத்தல் இடம் உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியினை வழங்க முன்வந்துள்ளதாகவும் இது தொடர்பிலான கூட்டம் கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு போட்டிகள்

(பூநகரி)

தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டி பூநகரி பிரதேச நூலகம், பூநகரி பிரதேசசபை இணைந்து பல்வேறுபட்ட போட்டிகளை பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் தெரிவித்தார். மேலும் நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கிராம ரீதியாக 3 வலயங்களில் விழிப்புணர்வுச் செயலமர்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை பள்ளிக்குடா பிரிவில் பி.ப. 3 மணிக்கு பொதுநோக்கு மண்டபத்திலும் 24 ஆம் திகதி சனிக்கிழமை கறுக்காய்த்தீவிலும் 31 ஆம் திகதி சனி ஆலங்கேணியிலும் விழிப்புணர்வுச் செயலமர்வு இடம்பெறவுள்ளது. செயலமர்வில் அப்பகுதி பிரதேச சபை வட்டார உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (9-84)

# போசாக்கு மட்டத்தினை உயர்த்துவது தொடர்பில் விசேட செயலமர்வு



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் போசாக்கினை மேம்படுத்துவதற்கான பன்முகப்பட்ட துறைகளினூடாக செயற்றிட்டத்தினை உருவாக்குதல் தொடர்பான செயலமர்வு நேற்று மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகம் மற்றும் போசாக்கினை மேம்படுத்துவதற்கான மக்கள் அமைப்பின் ஒழுங்கமைப்பில் **UNOPS** மற்றும் **WORLD VISION** அமைப்புக்களின் நிதியுதவியுடன் நாடுபூராகவும் 2018 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு காலப் பகுதிகளுக்கான செயற்றிட்டம் ஒன்றை உருவாக்கி அதனூடாக நாடளாவிய ரீதியில் மந்த போசாக்கு மட்டத்தை குறைத்து போசாக்கு மட்டத்தை அதிகரிக்கும் முகமாக மன்னார் மாவட்டத்தில் செயற்படும் அரச, அரசசார்பற்ற சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலின் கீழ் குறித்த செயலமர்வு இடம் பெற்றது.

குறித்த செயலமர்வில் போசாக்கு மட்டத்தினை அதிகரிப்பினை ஊக்குவிப்பது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் மாவட்ட ரீதியில் செயற்படும் அமைப்புகளின் ஆலோசனைகளும் பெறப்பட்டது.

குறித்த ஆலோசனைகளை உள்ளடக்கிய செயற்றிட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" செயற்றிட்டத்தின் கீழ், கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமத்தை சேர்ந்த வறுமைக் கோட்டுக்குட்பட்ட 11 மாணவர்களுக்கு 185,000 ரூபா பெறுமதியில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன.

# வவுனியாவில் அபிவிருத்தி செய்யப்படும் குளங்களை பார்வையிட்ட வடக்கு ஆளுநர்

(நெளுக்குளம்)

குளங்கள் கிராமங்களின் வளர்ச்சி எனும் தொனிப்பொருளில் காலநிலை மாற்றத்தினை தாக்குப்பிடிக்கும் ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் கீழ் வவுனியாவில் அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் குளங்களை வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் நேற்று சென்று பார்வையிட்டிருந்தார்.

கடந்த வருடம் குறித்த திட்டத்தின் கீழ் 14 குளங்கள் வவுனியாவில் புனரமைப்புச் செய்யப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதன் முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவன் வவுனியாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்ட ஆளுநர் அதன் பின்னர் மதவு வைத்த குளத்திற்கு சென்று புனரமைப்பு பணிகளை பார்வையிட்டிருந்ததுடன் ஏனைய சில குளங்களையும் சென்று பார்வையிட்டிருந்தார்.

காலநிலை வேறுபாடுகள் மற்றும் தீவிர மாற்றங்களுக்கு தாக்குபிடித்தலை நோக்காகக் கொண்டு உலர் வலயங்களில் வாழும் சிறு விவசாயிகளை பலப்படுத்தும் நோக்குடன் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் நிதியுதவியுடன் குறித்த அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

# அபிவிருத்திக் கூட்டத்துக்கு அழைப்பில்லை; விளக்கமளிக்குமாறு புதுக்குடியிருப்பு வணிகர் கழகம் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டம் நடைபெறும் தருணங்களில் புதுக்குடியிருப்பு வணிகர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதில்லை என புதுக்குடியிருப்பு பிரதேச வணிகர் கழகம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பான விளக்கத்தினை கோரி புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் காணப்படுகின்ற ஏனைய கழகங்கள் அமைப்புக்களை விட பாரியதும் பலம்மிக்கதுமான கழகமாக புதுக்குடியிருப்பு வணிகர் கழகம் காணப்படுகின்றது.

இந்த அமைப்பிற்கு ஏற்படும் சாதக பாதக நிலைமைகளை புதுக்குடியிருப்பு பிரதேச மக்களின் வாழவியலில் தாக்கத்தினை செலுத்துகின்றது.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்தி பற்றி கலந்துரையாடும் பொழுது வணிகர் கழகத்திற்கு அழைப்பு விடுக்காமை பிரதேச அபிவிருத்தியில் ஏதோ தவறுகள் இடம்பெறுகின்றன என எண்ணவைக்கின்றது.

பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு முன்னர் அழைப்பு விட்டு பின்னர் அதனை நிறுத்திக்கொண்டமைக்கான காரணத்தை அறியத்தருமாறு புதுக்குடியிருப்பு வணிகர் கழகம் பிரதேச செயலாளரிடம் எழுத்துமூலம் கோரியுள்ளார்கள். (9-281)

# பொருத்தமான தளபாடங்கள் இன்றி அவதிப்படும் வவு.தெற்கு மாணவர்கள்

(குருமன்காடு)

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பல பாடசாலைகளில் மாணவர்களுக்கு பொருத்தமான தளபாடங்கள் இல்லாத நிலை காணப்படுவதாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட சில பாடசாலைகளுக்கு அண்மையில் சென்றிருந்தேன். அங்கு மாணவர்களுக்கு தளபாடங்கள் இருக்கின்ற போதும் அவர்களது வகுப்பு, வயதுக்கேற்ற பொருத்தமான மேசை, கதிரை என்பன பற்றாக்குறையாகவே உள்ளது.

சில பெரிய மாணவர்கள் சிறிய மேசை கதிரைகளில் இருந்து கல்வி கற்கும் நிலை காணப்படுகின்றது. இதனால் அம் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர். இது தொடர்பில் வலயக் கல்விப் பணிமனை விபரங்களை திரட்டி எம்மிடம் தந்தால் அதனை பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பில் வர்த்தக கைத்தொழில் அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கல நாதன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்ற வவுனியா ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தின் போது குறித்த விடயம் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அக்கூட்டத்தில் பொருத்தமான தளபாடப் பற்றாக்குறை தொடர்பில் விபரங்களை வவுனியா தெற்கு மற்றும் வவுனியா வடக்கு கல்வி வலயங்கள் திரட்டி வழங்குமாறும் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. அவர்கள் அதனை வழங்கும் பட்சத்தில் அதனை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (9-250)

## அரச அதிபர், அதிகாரிகளுக்கு தெரியாமல்

# வவு.வடக்கில் சட்டவிரோத அபிவிருத்தி நடவடிக்கை

### மக்கள் பிரதிநிதிகள் அதிருப்தி

(நெளுக்குளம்)

அரச அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிபருக்கு தெரிவிக்கப்படாமல் வவுனியா வடக்கில் சட்டவிரோதமாக அபிவிருத்தி வேலை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடந்த வாரம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகளால் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கச்சல். சமனாங்குளம் கடந்த சில மாதங்களுக்கு முன்பாக புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதுடன் அதன் கீழ் உள்ள காட்டுப்பகுதி அழிக்கப்பட்டு குடியேற்றம் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டு வருகிறது.

வவுனியா கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் காணப்படும் குறித்த குளமானது அந்தத் திணைக்களத்திற்கு தெரியாமலேயே அநுராதபுரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் புனரமைப்புச் செய்யபட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீட்டை ஜனாதிபதியின் கீழ் செயற்படும் செயலணி ஒன்று ஒதுக்கியுள்ளதுடன் அதன் கீழான காணிகள் வேறு பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கும் நடவடிக்கையினை மகாவலி அதிகார சபை மேற்கொண்டுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

குறித்த குளம் புனரமைப்பு மற்றும் அதன் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிலப்பகுதி தொடர்பாக தனக்கு எந்தவிடயமும் தெரியாது எனத் தெரிவித்த வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் இவ்விடயம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் மற்றும் அரச அதிபருக்கு ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளதாக ஒருங்கிணைப்புக் குழுவிடம் தெரிவித்தார்.

எமது நிர்வாகத்தின் கீழ் வருகின்ற குறித்த குளமானது எமக்கு தெரிவிக்கப்படாமலே புனரமைக்கப்படுகிறது. அதன் கீழான காணி முன்னம் வைத்திருந்தவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. எனவே எமது திணைக்களத்திற்கு குறித்த குளத்தினை கையளிக்குமாறும் அந்த காணிகளை ஏற்கனவே வைத்திருந்த மக்களுக்கே வழங்குமாறும் பாராளுமன்றம் மற்றும் அரச அதிபருக்கு தாம் தெரியப்படுத்தியுள்ளதாக வவுனியா மாவட்ட கமநல சேவைகள் நிலையத்தின் உதவி ஆணையாளர் ஒருங்கிணைப்புக் குழுவிடம் தெரிவித்திருந்தார்.

ஒரு மாவட்டத்தில் இடம்பெறும் அபிவிருத்தி தொடர்பாக மாவட்டத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிற்கும் தெரியாது என்றால் இந்தக் கூட்டம் எதற்கு. இந்த நிர்வாகக் கட்டமைப்புகள் எதற்கு என மக்கள் பிரதிநிதிகள் தமது அதிருப்தியை வெளியிட்டதுடன் இவ் விடயங்கள் தொடர்பாக மாவட்ட ரீதியாக குழு ஒன்று அமைக்கப்பட்டு அந்தக்குழுவின் பங்களிப்புடனே இவ்வாறான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும். இனிமேல் மாவட்டத்திற்குள் இடம்பெறும் அபிவிருத்திகள் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுவிற்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் மக்கள் பிரதி நிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

**எல் வலயம்**

குறித்த குளத்தின் கீழ் நெற்செய்கையினை மேற்கொண்ட அப்பகுதியைச் சேர்ந்த தமிழ்மக்கள் போர் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் பல வருடங்களாக குறித்த குளம் பாவனையற்று கிடந்துள்ளதுடன் அதன் கீழான விவசாயக் காணிகளும் காடுகளாக காணப்பட்டுள்ளன.

ஏன்வே அதனை பயன்படுத்தி குறித்த குளத்தினை உள்ளடக்கிய பகுதியினை மகாவலி எல் வலயமாக உள்ளீர்க்கப்பட்டு மகாவலி அதிகாரசபை வளைத்துக் கொண்டுள்ளதுடன் அதன் கீழ் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சிங்கள மக்களை குடியேற்றும் செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருவதாக பொது மக்களும் சில அரசியல்வாதிகளும் குற்றம் சாட்டியிருந்தனர்.

**மக்கள் விசனம்**

எனினும் குறித்த விடயம் இவ்வருட ஆரம்பத்திலேயே ஊடகங்கள் வாயிலாக அனைவருக்கும் தெரியவந்த நிலையில் வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் அதிகமான கரிசனை கொள்ளாமல் இருந்ததாக வவுனியா வடக்கைச் சேர்ந்த பொதுமக்கள் தற்போதும் குற்றம் சுமத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (9-299)

## கம்பரெலிய திட்டத்தில் சிறுவர் பூங்கா

(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்திற்கான சிறுவர் பூங்கா பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் சிபாரிசுக்கு அமைவாக 0.5 மில்லியன் ரூபா செலவில் அமைக்கபபடவுள்ளது.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்திற்கு உட்பட்ட முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப பாடசாலை கடந்த வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் முருகானந்தா ஆரம்ப பாடசால்லயில் அதிபர் பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர் பாராளுமன்ற உறுப்பினரிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாக மேற்படி பாடசாலைக்கான சிறுவர் பூங்கா அமைப்பதற்கென கம்பரெலிய திட்டத்தின் 0.5 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன். பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (9-315)




# வவு.காணி மத்தியஸ்தர் சபை மூலம் 214 காணி பிணக்குகளுக்கு தீர்வு

### சபையின் தவிசாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

வவுனியா விசேட காணி மத்தியஸ்த சபையின் இருபத்தைந்து அமர்வுகள் மூலம் 214 காணிப் பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என சபையின் தவிசாளர் இ.நவரட்ணம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில். கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வவுனியா விசேட காணி மத்தியஸ்த சபை இலங்கையில் அமைக்கப்பட்ட 6 ஆவது விசேட காணி மத்தியஸ்த சபையாகும். இச் சபையின் 25 அமர்வுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இதுவரை 664 காணிப் பிணக்குகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் 214 காணிப்பிணக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதில். 34 தனியார் காணிப்பிணக்குகளுக்கும் 416 அரச காணிப் பிணக்குகளுக்கும் என மொத்தமாக 450 பிணக்குகளுக்கு தீர்வு காணப்படவில்லை. இதில் 90% மான பிணக்குகள் வவுனியா பிரதேச செயலகத்துடன் தொடர்புடையவை.



வவுனியாவில் காணிப்பிணக்குகள் அதிகளவில் காணப்பட்டுள்ள போதிலும் மக்கள் மத்தியில் காணிப்பிணக்குகள் தொடர்பான விழிப்புணர்வு இல்லை. எனவே பிணக்குகளை விசேட காணி மத்தியஸ்த சபைக்கு ஆற்றுப்படுத்துவதன் மூலம் இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வவுனியா. செட்டிகுளம். நெடுங்கேணி ஆகிய பகுதிகளில் சுழற்சி முறையில் இவ் அமர்வுகள் இடம்பெறுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (9-250)

## மாற்றுத்திறனாளிகளுக்கான பயிற்சி நெறி ஆரம்பம்

(கிளிநொச்சி)

மாற்றுத்திறனாளிகளுக்கு கைத்தொலைபேசி திருத்தும் பயிற்சி நெறி கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணி க்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

வட மாகாண சமூக சேவை கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறிக்கு 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை 10 தினங்கள் இப் பயிற்சி நெறி நடைபெற உள் ளது. இப் பயிற்சியில் ஸ்மார்ட் கைத் தொலைபேசிகளின் **Software**, **Hardware** முறைமைகள் செய்முறைப் பயிற்சிகளுடன் வழங்கப்படவுள்ளது.

அதேவேளை சென்ற வருடம் கைத்தொலைபேசிப் பயிற்சியில் கலந்து கொண்ட 10 பேருக்கு ஐந்து தினங்கள் **Software** பயிற்சி நெறி இம்மாத இறுதியில் நடைபெற உள்ளது. (9)



வவுனியாவில் கிராம மட்டத்தில் தலைமைத்துவம் வகிக்கும் பெண்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் வவுனியா மில் வீதியில் உள்ள விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் புரிந்துணர்வு செயற்பாடுகள் என்னும் தொனிப் பொருளில் பெண்கள் கிராம மட்டத்தில் தலைமைத்துவம் வழங்கலை வலுப்படுத்தல். எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன. (படம்:குருமன்காடு செய்தியாளர்)

## கழிவகற்றல் முகாமைத்துவம் சீரில்லை; முல்லை.நகர்ப்பகுதி மக்கள் விசனம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து அகற்றப்படும் கழிவுகள் வீதிகளில் சிந்துவதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள் பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

முல்லைத்தீவு நகரத்தின் கழிவுகள் தண்ணிரூற்று, நெடுங்கேணி வீதியில் கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் குவிக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு நகரத்தில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தூரத்தில் குறித்த கழிவுகள் கொட்டப்படும் இடம் உள்ளது.

நகரத்தில் இருந்து கழிவுப் பொருட்களினை கொண்டு செல்லும் போது பொலித்தீன் பைகள், ஏனைய கழிவுப் பொருட்கள் வீதியில் கொட்டப்பட்டு கிடப்பதன் காரணமாக காலை வேளையில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் பொதுமக்களும் துர்நாற்றம் வீசும் கழிவுப் பொருட்களை கடந்தே செல்ல வேண்டி உள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையினர் கழிவுப் பொருட்களைப் பாதுகாப்பாக மூடிக் கொண்டு செல்ல வேண்டும் என பொது அமைப்புகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தாலும் அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்னொரு பக்கம் கரைதுறைப்பற்று பிரதேச சபையில் கழிவகற்றலுக்குரிய மூடிய வாகனங்கள் பற்றாக்குறை காரணமாக உழவு இயந்திரங்களில் கழிவுப் பொருட்களை அகற்றும் போது வீதிகளில் சிந்தும் நிலைமை காணப்படுகின்றது என பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (9-350)






கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயத்தின் பொன்விழா நிகழ்வினுடைய முதலாம் நாள் நிகழ்வுகள் கடந்த வாரம் இடம் பெற்றது. பாடசாலையின் முதல்வர் தலைமையில் நடைபெற்ற முதல்நாள் நிகழ்வில் முத ன்மை விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கலந்து கொண்டு அவரது நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட வளைவினை திறந்து வைத்தனர். பின்னர் பழைய மாணவர்களின் துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகளை பாடசாலை சமூகத்திடம் கையளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. சுமார் ஒரு கோடிக்கு மேற்பட்ட பாடசாலையின் பௌதீக வளங்களை உள்ளடக்கியதாக அபிவிருத்தித் திட்டங்களை பழைய மாணவர்கள் பாடசாலை சமூகத்திடம் கையளித்தனர். அதன் பின்னர் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்ட திறந்த அரங்கினையும் நாடாளுமன்ற உறுப்பினர் திறந்து வைத்தார். (படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)




# மாநில அந்தஸ்தை இழக்கும் காஷ்மீர்

## இரு யூனியன் பிரதேசங்களாக பிரிப்பு





மத்திய அமைச்சரவையின் முடிவின்படி ஜம்மு-காஷ்மீர் என்ற தனி மாநிலம் இனி லடாக் மற்றும் ஜம்மு-காஷ்மீர் என்ற இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்படும் என உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிவித்துள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியலமைப்பின் சட்டப்பிரிவுகள் 370, 35ஏ ஆகியவற்றை ரத்து செய்யும் மசோதா நேற்று பாராளுமன்ற மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கடும் எதிர்ப்புக்கு இடையில் இந்த மசோதாவுடன் மேலும் 3 மசோதாக்களை தாக்கல் செய்து உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மத்திய அமைச்சரவையின் முடிவின்படி ஜம்மு-காஷ்மீர் என்ற தனி மாநிலம் இனி லடாக் மற்றும் ஜம்மு-காஷ்மீர் என்ற இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கப்படும் என அறிவித்தார்.

“தற்போதைய ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் உள்ள லடாக் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்ட பகுதியாக இருந்தாலும் மக்கள் தொகை நெருக்கம் என்பது மிகக் குறைவாகவே உள்ளது. லடாக் பகுதியை யூனியன் பிரதேசமாக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஷ்மீரில் தொடரும் பதற்றம் 144 தடை உத்தரவு பிறப்பிப்பு

(காஷ்மீர்)

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலை காரணமாக ஸ்ரீநகர் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


குறித்த தடை உத்தரவு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மறு உத்தரவு வரும் வரை 144 தடை உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், காஷ்மீரில் மெகபூபா முஃப்தி, உமர் அப்துல்லா உள்ளிட்ட தலைவர்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களை மூடுவதற்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சொந்தங்களின் உயிரைக் குடித்த சொத்தாசை

## பஞ்சாப்பில் பரபரப்பு



(பஞ்சாப்)

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் கோடீஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞரொருவர், தமது குடும்பத்தைச் சேர்ந்த 5 பேரை சுட்டுக்கொலை செய்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தின் மோகா மாவட்டத்தைச் சேர்ந்தவர் குர்ச்சரன் சிங். இவருடைய மனைவி குர்தீப் கவுர் (வயது-70). இந்தத் தம்பதியருக்கு மஞ்சீத் சிங் (வயது-55) என்கின்ற மகனும், பிந்தர் கவுர் (வயது-50) என்கின்ற மருமகளும் உள்ளனர்.

இவர்களுடன் மகன் சந்தீப் சிங் (வயது-27), மகள் அமன் ஜோத் கவுர் (வயது-33) மற்றும் பேரக்குழந்தை மனீத் கவுர் (வயது-3) ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் வீட்டில் 6 பேர் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் 6 பேரின் உடலையும் கைப்பற்றி உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் பலத்த காயங்களுடன் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த குர்ச்சரன் சிங்கை மீட்டு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து வீட்டில் சோதனை மேற்கொண்ட பொலிஸார், சந்தீப் சிங் கைப்பட எழுதியிருந்த கடிதம் ஒன்றினை மீட்டுள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

குறித்த அக்கடிதத்தில், தங்களுடைய குடும்பத்திற்குச் சொந்தமான நிலத்தை வேறு ஒரு நபருக்குக் கொடுக்க குடும்பத்தினர் முடிவெடுத்தது தனக்குப் பிடிக்கவில்லை என்றும், அதன் காரணமாகவே தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா, சகோதரி மற்றும் அவருடைய குழந்தையைத் துப்பாக்கியால் சுட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவமானது அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## காஷ்மீரில் நிலவு

# ட்ரம்ப் மத்தியஸ்தம் வகிக்க இ

## இம்ரான் அழைப்பு; இ



(இஸ்லாமாபாத்)

**காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா மத்தியஸ்தம் வகிக்க இதுவே சரியான தருணம் என பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் அழைப்பு விடுத்துள்ளார்.**


காஷ்மீரிலும், எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியிலும் தற்போது பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

காஷ்மீர் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களில் ஏழு பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்ததாக இந்தியா அறிவித்திருந்தது.

இதற்கு பதிலளிக்கும் முகமாக கருத்துத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை தாண்டி அப்பாவி மக்கள் மீது இந்திய இராணுவம் நடத்திய தாக்குதலுக்குத் தனது கண்டனத்தை பதிவு செய்துள்ளார்.

காஷ்மீர் எல்லையில் சர்வதேச மனிதாபிமான சட்டம் மீறப்பட்டுள்ளதாகவும் ஐ.நா. பாதுகாப்பு ஆணையகம் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஏற்பட்டுள்ள குறித்த சர்வதேச அச்சுறுத்தல் பற்றி

# சிரியாவில் ஆயுதக்கி 31 இராணுவ வீரர்கள்



(டமாஸ்கஸ்)

சிரியாவில் விமானப்படைத் தளத்தில் இருந்த காலாவதியான ஆயுதங்களை அப்புறப்படுத்தும் போது ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் 31 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். சிரியாவின் ஹோம்ஸ் மாகாணத்தில் உள்ள ஷாய்ரத் நகரில் விமானப்படைத் தளம் ஒன்று அமைந்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் பகுதிகளில் அரச படை வான்வழித் தாக்குதல் நடத்துவதில் ஷாய்ரத் விமானப்படைத் தளம் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

அங்கு உள்ள களஞ்சியம் ஒன்றில் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்படும் வெடிபொருட்கள் மற்றும் பல்வேறு ஆயுதங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், நேற்று முன்தினம் ஆயுதக்கிடங்கில் இருக்கும் காலா

# காஷ்மீரை பிரிக்கும் சட்ட மசோதா ஜனநாயகப் படுகொலை- வைகோ

(டில்லி)

காஷ்மீரை பிரிக்கும் மசோதா ஜனநாயக படுகொலை. இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன் என்று வைகோ தெரிவித்தார். காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வது என மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இதனை மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா நேற்று மாநிலங்களவையில் அறிவித்தார்.

காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து ரத்து தொடர்பான மசோதாவை தாக்கல் செய்ய எதிர்ப்பு தெரிவித்து மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

இதுதொடர்பாக மாநிலங்களவையில் வைகோ உரையாற்றும்போது,

ஜம்மு-காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து காஷ்மீர் மக்களின் உணர்வுகளோடு விளையாடி விட்டனர். கூடுதல் இராணுவ வீரர்கள் அங்கு நிறுத்தப்பட்டபோது, நான் கவலைப்பட்டேன். கொசோவோ, கிழக்கு திமோர் மற்றும் தெற்கு சூடானாக காஷ்மீர் ஆகக் கூடாது. காஷ்மீர் மக்களுக்கு நேரு கொடுத்த வாக்குறுதியை மீறுகிறது பா.ஜ.க. காஷ்மீரை காக்க கார்கில் போரில் தமிழ் இளைஞர்கள் உயிர்நீத்தனர்.


காஷ்மீர் விவகாரத்தில் ஐ.நா.கவுன்சில் தலையிடக் கூடும். காஷ்மீரை பிரிக்கும் மசோதா ஜனநாயக படுகொலை. காஷ்மீர் விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், சூட்சுமமாக காய் நகர்த்துகிறார். இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன். இது அவமானம், அவமானம், அவமானம்... இது ஜனநாயகத்தின் படுகொலை என கவலையுடன் தெரிவித்தார். (ஐ)




நிலவும் பதற்றம்

## க இதுவே சரியான தருணம்

### பு; இந்தியா எதிர்ப்பு



கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்க ஜனாதிபதி டொனா ல்ட் ட்ரம்ப் மத்தியஸ்தம் வகிக்கத் தயார் என்று தெரிவித்திருந்தார். காஷ்மீரிலும், எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியிலும் நிலைமை மோசமடைந்து வரு வதால் ஜனாதிபதி ட்ரம்ப் மத்தியஸ்தம் வகிக்க இது தான் சரியான தருணம் என்றும் பிரதமர் இம்ரான் கான் அழைப்பு விடுத்தார். அமெரிக்கா தலையிடுவதை இந்தியா விரும்பாத நிலையில் பாகிஸ்தான் இவ்வாறு தெரிவித் துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

### எச்சரிக்கையை மீறியதால் விபரீதம்

## இரண்டு படகுகள் கவிழ்ந்து விபத்து; 31 பேர் பலி, 62 பேர் பாதுகாப்பாக மீட்பு

(மணிலா)

பிலிப்பைன்ஸில் கடல் பயணத்தின்போது சூறாவளிக் காற்றுடன் பெய்த கடும் மழையில் சிக்கிய இரு படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது. இந்த விபத்தில் 31 பேர் உயிரிழந்துள்ளனர்.



குய்மாரஸ் மற்றும் ஈவோய்லோ மாகாணங்களுக்கு இடையில் கடல் வழியாகப் பயணிகளை ஏற்றிச்சென்ற இரு படகுகள் கடந்த சனிக்கிழமை மாலை சூறைக்காற்றுடன் அடித்த கனமழையில் சிக்கி அடுத்தடுத்து கவிழ்ந்தன.


இதையடுத்து, கடலோரக் காவற் படையினர் 62 பயணிகளைப் பாதுகாப்பாக மீட்டதுடன், நீரில் மூழ்கி உயிரிழந்த 31 பேரின் உடல்களையும் கண்டெடுத்தனர்.

நிலநடுக்கங்களால் அடுத்தடுத்து பாதிக்கப்பட்டும் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆண்டுதோறும் சுமார் 20 முறை கடற்புயல் மற்றும் பலத்த சூறாவளி காற்றுடன் பெருமழையும் பெய்வது வழக்கமாக உள்ளது.

இந்நிலையில், அந்நாட்டின் கிழக்கு கடலோரப் பகுதிகளில் பலத்த சூறைக்காற்றுடன் கன மழை பெய்யவுள்ளதாகவும் கடலில் பயணங்கள் மற்றும் மீன்பிடியில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும் வானிலை ஆய்வு மையம் எச்சரித்திருந்தது.

ஆனால், இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் கடற்பயணம் மேற்கொண்டதாலேயே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## ங்கிடங்கில் வெடிப்பு கள் பரிதாபமாக பலி!



வதியான வெடிபொருட்கள் மற்றும் ஆயுதங்களை அகற்றும் பணியில் இராணுவ வீரர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அந்தத் தருணத்தில் சற்றும் எதிர்பாராத விதமாக அங்கு பயங்கர வெடி விபத்து இடம்பெற்றது. களஞ்சியத்தில் இருந்த வெடி பொருட்கள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறின. இதில் 31 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர்.

மேலும் பல வீரர்கள் படுகாயம் அடைந்தனர். கடந்த 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிரிய இராணுவம் இரசாயனத் தாக்குதலில் ஈடுபடுவதாகக் கூறி ஷாய்ரத் விமானப்படைத் தளம் மீது அமெரிக்கப் படை அதிரடி வான் தாக்குதல் நடத்தியதில் 80 இற்கும் மேற்பட்ட வீரர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நச்சுத்தாக்குதல் விவகாரம் ரஷ்யா மீது கூடுதல் வரி

(வோஷிங்டன்)

ரஷ்யா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

பிரித்தானியாவில் வைத்து ரஷ்யாவின் முன்னாள் உளவாளி மீது நச்சுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட விவகாரத்தினைத் தொடர்ந்தே இவ்வாறு மேலதிக பொருளாதாரத் தடை விதிக்கப்படவுள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் Morgan Ortagus தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

'முன்னாள் ரஷ்ய உளவாளி செர்கெய் ஸ்க்ரிபால் மீது நச்சுத் தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தில், ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படுகின்றன.

இதற்கமைய சர்வதேச நிதி அமைப்புகள் ரஷ்யாவுக்கு கடன் உதவி, நிதி உதவி, தொழில்நுட்ப உதவி அளிப்பதற்குத் தடை விதிக்கப்படுகிறது.

மேலும், ரஷ்ய அரசாங்கத்திற்கு கடன் வழங்குவதில் அமெரிக்க வங்கிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. மேலும், ரஷ்யாவுக்கு பொருட்களையும் தொழில்நுட்பங்களையும் ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகிறது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1990 ஆம் ஆண்டு ரஷ்ய இராணுவ உளவு அமைப்பில் பணியாற்றி வந்த செர்கெய் ஸ்க்ரிபால் (வயது-68), பிரித்தானியாவிற்கு இராணுவ இரகசியங்களை வெளியிட்டு வந்தார்.

அவரது நடவடிக்கையைக் கண்டுபிடித்த ரஷ்ய அதிகாரிகள், 2004 ஆம் ஆண்டு செர்கெய் ஸ்க்ரிபாலை கைது செய்து சிறையிலடைத்தனர். எனினும், உளவுக் கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்பட்ட செர்கெய் ஸ்க்ரிபால், பிரித்தானியாவில் வசித்து வருகிறார்.


இந் நிலையில் செர்கெய் ஸ்கிரிபால் மற்றும் அவரது 35 வயது மகள் யூலியா மீது கடந்த ஆண்டு மார்ச் மாதம் நச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தாக்குதலை ரஷ்ய உளவு அமைப்பினர் மேற்கொண்டதாக பிரித்தானிய புலனாய்வுத் துறை குற்றச்சாட்டுக்களை முன்வைத்தது.

இதனைத் தொடர்ந்து, குறித்த சம்பவத்துக்குப் பொறுப்பேற்குமாறு ரஷ்யாவிற்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் ரஷ்யா மீது அமெரிக்கா ஏற்கனவே பொருளாதாரத் தடைகளை விதித்திருந்தது.

இந் நிலையில் அதன் தொடர்ச்சியாக, தற்போது ரஷ்யா மீது அமெரிக்கா மேலதிக பொருளாதாரத் தடைகளை அறிவித்துள்ளது. (ஐ)

## அமெரிக்க துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்; ஐந்து நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நாடு முழுவதும் அடுத்த ஐந்து நாட்களுக்கு தேசியக் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட வேண்டும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

அமெரிக்காவின் இரண்டு மாநிலங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைத் தொடர்ந்தே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

முன்னதாக டெக்சாஸ் மாநிலம் எல் பாஸோ (El Paso) நகரில் உள்ள பேரங்காடியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் உயிரிழந்தனர்.

அதேவேளை, ஒஹியோவில் உள்ள கேளிக்கைக் கூடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஒன்பது பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பலவாரகால ஆர்ப்பாட்டங்களால் ஆபத்தான நிலையில் ஹொங்கொங்

### கேரிலாம் கவலை

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் அண்மைக்காலமாக நடத்தப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்கள், நகரத்தை மிகவும் ஆபத்தான நிலைக்கு கொண்டு சென்றிருப்பதாக அதன் தலைமை நிர்வாகி கேரிலாம் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று திங்கட்கிழமை காலை செய்தியாளர்களைச் சந்தித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பலவாரகால ஆர்ப்பாட்டங்கள் சீனாவின் அரசுரிமைக்குச் சவாலாய் அமைந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹொங்கொங்கில் கடந்த ஒன்றரை மாதகாலமாக வார இறுதி நாட்களில் ஆர்ப்பாட்டங்கள் நீடிக்கும் சூழலில், கேரிலாமின் விசேட செய்தியாளர் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.



தற்போதுள்ள நிலையில் தாம் பதவி விலகப் போவதில்லை என்றும், ஹொங்கொங் மக்கள் ஒன்றுபட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ஐ)

# கூட்டணி அமைக்கவே தடுமாறும் ஐ.தே.க.

## தேர்தலில் வெற்றிபெறும் எனக்கூறுவது வேடிக்கையாகவுள்ளது—செஹான் நக்கல்

(கொழும்பு)

**கூட்டணி ஒன்றினையே சரியாக அமைத்துக்கொள்ள தடுமாறும் ஐக்கிய தேசியக்கட்சியினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியடைவோம் எனக் கூறுவது வேடிக்கையாகவுள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அறிவித்தவுடன் கட்சி மூன்றாகப் பிளவுபடுவது உறுதி.

ஐக்கிய தேசியக் கட்சியின் உள்ளகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாத தலைமைத்துவத்தால் ஒருபோதும் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து எவ்வித முரண்பாடுகளும் எதிரணிக்குள் கிடையாது. தலைமைத்துவத்தின் கருத்திற்கு அனைத்துத் தரப்பினரும் இதுவரையில் இணக்கம் தெரிவித்து தீர்மானங்களை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று உத்தியோகபூர்வமாக இம்மாதம் 11 ஆம் திகதி அறிவிக்கப்படும்" என



செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்தார். (இ-7)

## புத்தளத்தில் வர்த்தகரின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல்!

### மலர் மாலை வைத்துவிட்டு சென்றதால் பரபரப்பு



(புத்தளம்)

புத்தளத்தில் வர்த்தகர் ஒருவரின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன், மலர் மாலைகளும் வைக்கப்பட்டதாக தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

நேற்று அதிகாலை 1.50 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த சிலர் மலர் மாலையை வாசலின் முன்னால் தொங்கவிட்ட பின்னர் பெற்றோல் குண்டு வீசித் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றனர்.

வீட்டில் வர்த்தகர் மற்றும் அவரது மனைவி பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்த போதிலும் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படவில்லை என விசாரணை நடத்தும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்த பொருட்கள் சில வற்றிற்கு மாத்திரம் பாதிப்பு ஏற்பட்டதாக தெரியவருகிறது. (இ-7)

## 6 மாதத்தில் 24,150 சுற்றிவளைப்பு; 68 பில்லியன் ரூபாய் வருமானம்

(கொழும்பு)

சட்டவிரோத மதுபான உற்பத்திகளை ஒழிக்கும் நோக்கில் மதுவரித்திணைக்களத்தினர் கடந்த 6 மாத காலத்திற்குள் மாத்திரம் 24,150 சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டனர்.

சட்டவிரோத மதுபான உற்பத்தி, உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்களை தம்வசம் வைத்திருத்தல், மதுபான தயாரிப்பிற்கான உற்பத்திப் பொருட்கள் வைத்திருத்தல், சட்டவிரோத மதுபான விற்பனை உள்ளிட்ட குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த சுற்றிவளைப்புக்கள் இடம்பெற்றதாக மதுவரித் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.ஜி.சுமனசிங்க தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு மதுவரித் திணைக்களத்தில் தேசிய வருமானம் 130 பில்லியனாக ஈட்ட வேண்டும் என்ற இலக்கு காணப்பட்டது. அதற்கமைய முடிவுற்ற 6 மாத காலத்திற்குள் 68 பில்லியன் நிதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மன இறுக்கம்

ஒருவர் கோயிலுக்குப் போய் முடி இறக்கி விட்டு வரலாம் என்று இருக்கிறேன்! என்று ஒரு வருடமாக சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் ஒரு நாளாவது அவர் போய் வந்த பாடில்லை.

ஏன் சேர் இப்படி அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வருகிறீங்க? ஒரு நாள் போய் மொட்டை போட்டுக் கொண்டு வந்து விடவேண்டியது தானே! என்றேன்.

நான் என்ன சேர் செய்வேன். ஏகப்பட்ட வேலை. எப்ப பார்த்தாலும் டென்சன். கோயிலுக்குப் போக நேரமே கிடைக்குதில்லை என்றார்.

ஒரு வருடம் கழித்து ஒரு நாள் அவரைப் பார்த்தேன். தலை சுத்தமாக இருந்தது. என்ன சேர் கோயிலுக்குப் போய் விட்டு வந்து விட்டீங்க போல் இருக்கே என்றேன்.

அவர் கோமாக நான் எங்கே சேர் போனேன். அங்கே போக வேண்டிய அவசியமே இல்லாத அளவிற்கு முடியெல்லாம் தானாகவே கொட்டிப் போய் விட்டது என்றார்.

எதனால் அப்படி ஆகியது? என்று விசாரித்தேன். டென்சன் தான் அதற்குக் காரணம் என்று வைத்தியர் சொல்கிறார்.

இது சில பேருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் முடி உதிர்வதற்கும் வழுக்கை விழுவதற்கும் டென்சனுக்கும் ஒரு காரணம் என்பது தான் உண்மை. டென்சனாலே என்னென்ன கோளாறுகள் வரும் தெரியுமா?

வைத்தியரைக் கேட்டால் அவர்கள் ஒரு பட்டியலையே வரிசையாகச் சொல்லுகிறார்கள்.

தலைவலி, இடுப்புவலி, முதுகுவலி, அஜீரணம், மலச்சிக்கல், மூலம், சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், இதயக் கோளாறு, ஹைபர் டென்சன், ஹிஸ்ரீரியா, வேறு சில மனநோய்கள், பெண்களுக்கான மாதாந்தக் கோளாறுகள், ஹார்மோனால் உடன் விளைவுகள் இப்படி இதிலே எது வேணும் என்றாலும் வரலாம் டென்சனால்.

ஒருவர் கடுமையான டென்சனிலே இருக்கிறார். அந்த சமயத்திலே அவர் வயிற்றுக்குள்ளே ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள்.

எப்படி என்கிறீர்களா? gastroscope என்ற ஒரு கருவி மூலம் தான்.

அப்படி ஆராய்ந்து பார்க்கின்ற போது இளஞ்சிவப்பாக இருக்க வேண்டிய அந்த உட்பகுதி செக்கச்செவேல் என்று தக்காளிப்பழும் மாதிரி இருந்ததாம். ஏன் அப்படி ஆகிவிடுகின்றது தெரியுமா? டென்சனாக இருக்கின்ற போது வயிற்றிலே அமிலம் அதிகமாக சுரக்கின்றதாம். அதனாலே இப்படி சிவந்து விடுகின்றதாம். அடிக்கடி இப்படி ஆகிக் கொண்டிருந்தால் மனிதனுக்கு hyperacidity என்ற நிலை உண்டாகிவிடும். அது முற்றிய நிலைமையிலே அல்சராகக் கூட மாறி விடுமாம்.

டென்சன் என்பது இயற்கை நமக்குக் கொடுத்திருக்கின்ற ஒரு எச்சரிக்கை உணர்வு-உடல் ரீதியான ஒரு தற்பாதுகாப்பு உணர்வு. ஒரு ஆபத்து வருகின்ற போது அதை எதிர்த்துப் போராடுவதற்கு அல்லது தப்பி ஓடுவதற்கு தயாராகி விடுகிறோமல்லவா? அது தேவைதானே!

ஆனால் இப்போது உள்ள சூழ்நிலையிலே எது கொடுத்தாலும் டென்சனுக்கு ஆளாகி விடுகிறோம். நமக்கு என்று ஒரு கௌரவத்தை எதிர்பார்க்கிறோம். அந்த கௌரவத்திற்கு ஒரு குறைவு வரும்போல இருந்தால் உடனே டென்சன். வர வேண்டிய பேருந்து நேரத்திற்கு வந்து சேரவில்லை என்றால் டென்சன்.

அநாவசியமாக உடம்பையும் மனதையும் போட்டு அலட்டிக் கொள்ளாதீர்கள். எதையும் ஈசியாக எடுத்துக் கொள்ளுங்கள். எப்பவும் positive ஆ think செய்யக் கற்றுக் கொள்ளுங்கள், negative ஆ யோசித்துக் கொண்டிருக்காதீர்கள்.

வீட்டிலே ஒரு பொருள் தீர்ந்து போய் விட்டது என்றால் அது இல்லை என்று நினைக்காதீர்கள். நாளைக்கு வாங்கிக் கொள்ளலாம் என்று நினையுங்கள். எதற்கெடுத்தாலும் எனக்கு நேரம் இல்லை என்று சொல்கின்ற பழக்கத்தை விட்டுவிடுங்கள். எதையும் முறையாக திட்டம் போட்டு வந்தால் எல்லாவற்றுக்கும் நேரம் இருக்கும். அது இல்லாமல் போய்விடாது.


எனக்கு இன்று நேரம் கிடைக்கவில்லை. அதனால் பல் விளக்கவில்லை என்று யாராவது சொல்வீர்களா? பொறுப்பாக உங்கள் கடமையைச் செய்யுங்கள். அதேநேரத்தில் ஆனந்தமாக இருப்பதற்குப் பழகிக் கொள்ளுங்கள்.

மன இறுக்கம் இல்லாமல் வாழுகின்ற வாழ்க்கை தான் மகத்தான வாழ்க்கை. அதிகமாக ஆசைப்படுவதும் டென்சனுக்கு ஒரு காரணம். ஒருவர் இருந்தார். அவர் எப்பவும் ஒரு சின்ன டென்சனுக்குக் கூட இடம் கொடுக்க மாட்டார். அதிகமாக ஆசைப்படமாட்டார்.

ஒரு நாள் ஆண்டவனே அவரைத் தேடிக் கொண்டு வந்து நீ எவ்வளவு காலம் உயிரோடு இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாய்? என்று கேட்டிருக்கிறார்.

அதற்கு அவர் நான் அதிகமாக ஒன்றும் ஆசைப்படவில்லை. சாகும் வரை உயிரோடு இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். அது போதும் என்றாராம் டென்சனே இல்லாத ஆசாமி.

# நல்லூர்க் கந்தனுக்கு இன்று கொடியேற்றம்



இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்து, நல்லூரிலே சரித்திர பிரசித்தி பெற்றதும் தொன்மையும் அழகும் வாய்ந்ததுமான நல்லூர் கந்தனுடை 2019 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டு மஹோற்சவத்தின் கொடியேற்றத் திருவிழா விகாரி வருடம் தமிழ் ஆடி 21 ஆம் நாள் (06.08.2019) இன்று முற்பகல் 10 மணிக்கு வெகு சிறப்பாக இனிதாக பக்திபூர்வமாக இடம்பெறுகிறது. ஆடியமாவசைக்கு ஆறாம் நாள் நல்லைக்கந்தனின் ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெற்று கந்தனின் திருக்கல்யாணத்துடன் உற்சவம் இனிதே நிறைவு பெறும். அழகன் என்றால் முருகன். முருகன் என்றால் அழகன். அந்த அளவுக்கு அள்ளி அள்ளி வழங்க குறையாத முருகன் தன்னை வழிபடும் பல்லின மக்களுக்கும் அருள் சுரந்து கொண்டிருக்கின்றான். திருவிழாக் காலங்களில் யாழ். நகரமே விழாக்கோலம் பூண்டிருக்கும். நல்லையம்பதி இந்திரலோகம் போல காட்சியளிக்கும். எங்கு பார்த்தாலும் அருள் மணக்கும், அந்தணர்களின் வேதபாராயண ஒலி வானைப் பிளக்கும். இத்தகைய மகத்துவம் நல்லை மண்ணுக்கு உண்டு.

கொடிச்சீலை வடிவமைப்பாளரிடம் காலாஞ்சி கையளிக்கும் நிகழ்வு கடந்த மாத இறுதிப் பகுதியில் கல்வியங்காட்டிலே இடம் பெற்றது. வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தல் கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சி ஒற்றைத் திருக்கை மாட்டுவண்டி மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெரும் திருவிழாவிற்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டது. கொடியேற்றத்திற்கான கொடிச் சீலையானது சிவஞான முதலியார் பரம்பரையில் கந்தையா-தர்மகுலசிங்கம் என்பவரின் இல்லத்திற்குச் சென்று ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியாரினால் பாரம்பரிய முறைப்படி கையளிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடம் தோறும் தலைமுறை தலைமுறையாக செங்குந்த மரபில் வந்த சிவஞான முதலியாரின் பேரனினால் நல்லூர் முருகனின் கொடியேற்றத்திற்க்கு முதல் நாள் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள வைத்தியர் வீட்டில் இருந்து மங்கள வாத்தியங்கள் சகிதம் கொடிச்சீலை எடுத்து வரப்பட்டு சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள வைரவநாதர் - வல்லிபுர சாமியினால் அமைக்கப்பெற்ற கொடித்தேர் மடத்தில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் முருகப் பெருமானுக்கு விசேட பூஜைகள் இடம் பெற்று அழகிய சித்திரத் தேரில் கொடிச்சீலை பக்த அடியார்கள் புடைசூழ மங்கள வாத்தியங்கள் முழங்க நல்லூர் பிரதான வீதிவழியாக கோலாகலமாக எடுத்து வரப்பட்டு பிரதம சிவாச்சாரியாரிடம் ஒப்படைக்கப்படும். இதுவே தொன்றுதொட்டு பல் நெடுங்காலமாக உள்ள பாரம்பரிய நடைமுறை.

நல்லூர் பதியினிலே வீற்றிருந்து தினைப்புனத்தின் கண்ணே வள்ளியெம்பிராட்டியாரை கவர்ந்த கள்வனாகிய முருகனை அலங்காரத் கந்தன் என்று பக்தர்கள் புனைப்பெயரால் அழைக்கின்றார்கள். இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழாவானது தொடர்ந்து 15 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மஞ்சத்திருவிழாவும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கார்த்திகை உற்சவமும், 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சந்தானகோபால் உற்சவமும், கைலாச வாகனம் மாலையும், 26 ஆம் திகதி திங்கட்கிழமை கஜவல்லி, மகாவல்லி உற்சவம் காலை, வேல் விமானம் மாலையும், 27 ஆம் திகதி செவ்வாய் தண்டாயுதபாணி உற்சவம் காலையும், 28 ஆம் திகதி புதன் மாலை சப்பரமும், 29 ஆம் திகதி வியாழன் காலை தேர்த்திருவிழாவும் 30 ஆம் திகதி வெள்ளி காலை தீர்த்த உற்சவமும் 31 ஆம் திகதி மாலை பூங்காவனமும் செப்டெம்பர் முதலாம் திகதி ஞாயிறு வைரவர் உற்சவமும் இடம்பெறும்.

நல்லூர் கந்தன் மஹோற்சவ காலங்களில் தினந்தோறும் நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபம், நல்லையாதீன மண்டபகம், துர்க்கா மணிமண்டபம் ஆகிய மண்டப்ங்களில் மாலை வேளைகளில் தெய்வீக இசையரங்குகளும், ஆன்மீக அருளுரைகளும் இடம்பெறுகின்றன. நல்லூர் தேரடிக்கு அருகாமையில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயனார் குருபூஜை மடம், நல்லூர் துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம், நல்லூர் பின் வீதியில் உள்ள முத்துத்தம்பி மணிமண்டபம் என்பவற்றில் அடியார்கட்கு திருவிழாக்காலங்களில் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்படுகின்றது. எனவே தெய்வீக மணம் கமழும் இன்றைய பொன்னாளில் கொடியேற்றம் காண வரும் பக்தர்கட்கு நல்லூர் முருகன் வல்வினை அகற்றி நாட்டிலே சாந்தி சமாதானம் நிலவ அருள்பாலித்து இம் மண்ணிலே எல்லோரும் இன்புற்று வாழ்ந்து தேடற்கரிய மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அனுபவிக்க திருவருள் பாலித்து இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ அருள்பாலிப்பாராக.

கந்தைய கனகசபை,
சண்டிலிப்பாய்.

# கந்தபுராணம் - நூலறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், "கந்த புராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்னும் தொனிப்பொருளை மையமாகக் கொண்டு, நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கும் "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வோடு இணைந்ததாக, இந்து சமய மாணவர்களிடையே கந்தபுராணம் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் பொருட்டு, "கந்தபுராணம் - நூலறிவுப் போட்டி" ஒன்றினையும் நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மட்டும் பங்குபற்றும் வரையறையோடு கூடியதான இப் போட்டியில் நூறு வினாக்களை உள்ளடக்கிய வினாத்தாள்கள் வழங்கப்படவுள்ளன. வினாத்தாள்களை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும், மாலை 6.30 மணிக்குப் பின் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம். அத்தாள்களிலேயே விடைகளையும் விபரங்களையும் குறிப்பிட்டுப் பதினெட்டாம் திருவிழாவுக்கு முன்பதாக (23.08.2019 இற்கு முன்) மேற்குறித்த வினாத்தாள்கள் விநியோகித்த இடங்களில் ஒப்படைக்கவும்.

சிறப்புத் திறனை வெளிக்காட்டும் மாணவர்களுக்கு சான்றிதழும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும் என இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்தார். (இ-7)




"கொடியேற்றி விடிவொன்று
தமிழருக்குத் தந்திடு வேலவா"

நல்லூரில் வீற்றிருந்து நல்லாட்சி புரிபவனே.!
அலங்காரக் கந்தனே அன்பு வடிவானவனே!
ஐங்கரன் தம்பியே அழகுமிளிர் நல்லூர் வேலவா!
மாறுபடு சூரனை அழித்து ஆட்கொண்ட வேலவா!
தேவர்களின் கண்ணீர் துடைத்து சிறைமீட்ட வேலவா!
நம்மவர் படும் துயர் பாராயே வேலவா!
கொடியேற்றி விடிவொன்று தமிழருக்கு
தந்திடு வேலவா!

நயினை விசு இராசநாயகம்.

## நல்லையில் கொடியின்று

குகனின் கொடியேறுது மகிழ்ந்து பாடுவோம்
குமரனை வேண்டியே காவடிகள் ஆடுவோம்
நல்லூர்க் கந்தனை நாளும் தொழுவோம்
நன்மைகள் பெற்று வாழ்வில் உயர்வோம்

செந்தூரனைப் போற்றி என்றும் பாடுவோம்
செல்வம் பதினாறும் பெற்று உயர்வோம்
பழனிப் பதியின் பாதங்களில் சரணடைவோம்
பாரில் சிறப்புற நித்தம் வாழ்வோம்

கந்தபுராண நாயகனே மயில் ஏறிடுவாய்
கஷ்டங்கள் தீர்ப்பவனே எழுந்தருள வருவாய்
அலங்காரக் கந்தனே அருள்புரிய எழுந்திடுவாய்
அகிலம் சிறப்புற நாளும் எழுந்தருள்வாய்.

அரியாலையூர் கு.யசிதீபன்

## சேவற் கொடி பறக்கிறது

பறக்கிறது பறக்கிறது சேவற்கொடி பறக்கிறது பறக்கிறது
நல்லைக் கந்தன் கோவில் வாசலிலே,
சக்தி வடிவேலனுக்குகொடியேற்றமாம்,
ஊரெல்லாம் கொண்டாட்டம்
பக்தகோடிகட்கு பரமானந்தம்,
உள்ளம் குளிர பரமானந்தம்
ஆனந்தக் கண்ணீர் வடிய பக்தி பரவசமாய்,
நாவில் நீர்வத்த முருகா! முருகா! முருகா! முருகா! என்று
ஒருமனதாய் இருந்து
அவனடியில் மனதை அடக்கி
ஒடுக்கி இருத்தி தரிசித்து
எம்தீராவினை துயர் வறுமையிடர்
யாவும் பறந்தோடவே
பக்திபாமாலைகளோடு பூமாலைகளும்
புனைந்து கொடுத்து
வள்ளி தேவசேனா சமேத சண்முகநாதப் பரமேஸ்வரர்
பாதம் பணிந்து ஏத்தி தொழுது முத்திக்கு வித்தான
நல்லை கந்தவடிவேலன் தாள் பணிவோம்

கலாபூஷணம் திருமுருகன்
க.சிவசுப்பிரமணியம்


## சந்தக்கவியில் நல்லைக்குமரன்

ஆடும் பரி யேறும் விரி
அயில் வேலவன் நல்லூர்
கூடு மடி யார்கள் தொழக்
கொடி யேறிடும் போழ்தில்
வாடும் வினை யறுப்பான், மனை
வசந்த மிசைத் திருப்பான்
நாடு மெழி லாடும் பொழில்
நல்லைக் கும ரோனே!

கலாபூஷணம் சந்தக்கவிஞர்
நவ. பாலகோபால்

# அரச காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவது சம்பந்தமான கேள்வி பதில்கள்

02



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

**கேள்வி-1:-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை நீண்டகாலக் குத்தகைக்கு விடுதல் சம்பந்தமான பொது நடைமுறை என்ன?

**பதில்:-** அரச காணி தொடர்பாக காணி நடவடிக்கைக் கோவையில் **(land manual)** கூறப்பட்டுள்ள தகவல்களுக்கமைய குத்தகையுரிமை பிரசித்த ஏலத்தின் மூலம் அல்லது கேள்விப்பத்திரம் கோரப்பட்டதன் மூலம் விற்பனை செய்யப்பட்டாலன்றி சட்டப்பிரகாரம் அரச காணிகள் வேறெந்த விதத்திலும் குத்தகைக்கு விடப்படலாகாது. கேள்விப் பத்திர மூலம் விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் குத்தகையுரிமை விற்கப்படலாம்.

விசேட காரணங்களினால் ஏதும் விசேட தகைமைகள் உள்ள சில குத்தகைக்காரர்களைத் தெரிவு செய்ய அவசியமேற்படுமிடத்து அல்லது கேள்விப் பத்திரம் கோருதல் காலத்திற்கேற்ப தேவைப்பட்டாலன்றி கேள்விப்பத்திர மூலம் குத்தகையுரிமை விற்கப்படலாகாது. அறிவித்தலொன்று வெளியிடப்பட்ட காணிக் கச்சேரியொன்றில் குத்தகைக்காரர்களைத் தெரிவு செய்யும் வழக்கம் அண்மையில் பின்பற்றப்பட்டு வருகின்றது. பழைய நகரொன்றிலிருந்து வெளியேற்றப்படும். ஆட்களுக்கு புதிய நகரில் காணிகளைத் குத்தகைக்கு வழங்கக் கருதுமிடத்து அல்லது ஏதேனும் ஒரு வகுப்பினைச் சேர்ந்த குத்தகைக்காரர்களுக்கு மாத்திரம் குத்தகையைக் கட்டுப்படுத்தக் கருதுமிடத்து. இதுபோன்ற விசேட சந்தர்ப்பங்களில் இவ்வழிமுறை பின்பற்றப்படுகின்றது.

**அரச காணியை நீண்டகால குத்தகைக்குப் பெற ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் பற்றி கேள்வி-2 இன் பதிலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.**

அரச காணி ஒன்றின் குத்தகை பிரசித்த ஏலத்தின் மூலம் அல்லது கேள்விப் பத்திரம் கோரி விற்கப்படும் பொழுது அது குறித்து விண்ணப்பம் கோருதல் ஏதேனும் வகுப்பைச் சேர்ந்த ஆட்களுக்கு மாத்திரம் எல்லைப்படுத்தப்பட வேண்டுமென உணரப்பட்டால் அவ்விதம் வரையறையப்படுதல் வேண்டும்.

அத்தகைய சந்தர்ப்பங்களில் அவ்விதம் வரையறைப்படுத்தும் பொழுது நிபந்தனையும் இக் குத்தகை எவ் வகுப்பினருக்கு வழங்கப்படும் என்ற விபரமும் விற்பனை பற்றிய அறிவித்தலில் சேர்க்கப்படல் வேண்டும். ஏதேனும் விசேட காரணமில்லாவிடில் குத்தகை ஆகக்கூடிய விலைக்கு கோரியவருக்கே வழங்கப்படல் வேண்டும்.

**கேள்வி -2 :-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அரச காணியை நீண்ட கால குத்தகைக்குப் பெற ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள்என்ன?

**பதில்:-**

**i.** 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவர் அல்லது, இலங்கைப் பிரஜைளைக் கொண்டுள்ள நிறுவனமாக இருத்தல்.

**ii.** ஏதேனும் அரச நிறுவனத்தின் அனுசரணையில் அரச காணித்துண்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமையைக் கொண்டிருத்தல் (வருடாந்த அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல், காணிக் கச்சேரி போன்ற நிகழ்வொன்றின் மூலமாக முறையாகத் தெரிவு செய்யப்பட்டிருத்தல்).

**iii.** கேள்வி மனுக்கள், காணிக் கச்சேரிகள், ஏலம் ஆகியவை மூலமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களாக இருத்தல்.

**iv.** அறநெறி அமைப்புக்கள், மதச் சார்புடைய நடவடிக்கைகள், அறிவியல் அலுவல்கள் ஆகியவற்றிற்கு அரச காணிகளை வேண்டி விண்ணப்பித்திருப்பவர்களாக இருத்தல்.

**1995.06.15 ஆம் திகதிக்கு முன்பிலிருந்து அரச காணியை அத்துமீறல் செய்து, அதனை அனுபவித்து வருபவராயின் அவர் அக் காணியை நீண்ட கால குத்தகைக்குப் பெற முடியும். கேள்வி 19 ம் பார்க்கவும்.**

**v.** சமூக நலன்களில் ஈடுபாடு கொண்டுள்ள சனசமூக நிலையமாக இருத்தல்.

**vi.** கூட்டுறவுச் சங்கமாக இருத்தல். (வீடமைப்பு போன்ற தேவைகளுக்காக சங்கங்களுக்கு அல்லது சமாஜங்களுக்கு).

**vii.** அரசு சார்ந்த கூட்டுத்தாபனமாக இருத்தல் (வங்கிகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள்).

**viii.** வர்த்தகம், கைத்தொழில் அல்லது கமச் செய்கை சார்ந்த செயற்றிட்டமாக இருத்தல்.

**ix.** ஏதேனும் விசேட சபைக்கு முன்னுரிமை குத்தகையொன்றை வழங்கப்பட வேண்டுமென்று ஏதேனும் சட்டத்தினால் விதிக்கப்பட்டிருத்தல். (1957 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்படும் குத்தகையை இதற்கு உதாரணமாகக் கூறலாம்).

**x.** 1995.06.15 ஆம் திகதிக்கு முன்பிலிருந்து அத்துமீறல் செய்து, காணியை அனுபவித்து வருபவராகவும் அவரைக் காணியிலிருந்து வெளியேற்றுதல் சாத்தியமில்லாததாகவும் இருத்தல்.

**கேள்வி -3 :-** அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் சலுகை (முன்னுரிமை) அடிப்படையில் காணிகளை குத்தகைக்கு வழங்குதல் என்றால் என்ன?

**பதில்:-** பிரபல்யமானதும் விசேடமானதுமான காரணிகள் இருப்பின் மாத்திரமே முன்னுரிமை அடிப்படையில் அரச காணிகள் குத்தகைக்கு வழங்கப்படலாம். முன்னுரிமை அடிப்படையில் காணிகளை வழங்குதல் அல்லது குத்தகைக்கு விடுதல் என்பதிலிருந்து கருதப்படுவது யாதெனில் போட்டி தவிர்க்கப்பட்டு அரச காணிகளை எவரேனும் விசேட ஆளுக்கு அல்லது ஆட்களுக்கு அல்லது தாபனங்களுக்கு வழங்குதல் ஆகும். சலுகை (முன்னுரிமை) அடிப்படையில் காணிகள் நீண்ட காலக் குத்தகைக்கு மட்டுமல்ல குறுகிய காலக் குத்தகைக்கும் வழங்கப்படுகின்றன.

**பொதுவாக அரச காணிகளின் குத்தகையுரிமை பிரசித்த ஏலத்தின் மூலம் அல்லது கேள்விப்பத்திரம் கோரப்பட்டதன் மூலம் விற்பனை செய்யப்பட்டாலன்றி வேறெந்த விதத்திலும் வழங்கப்படக் கூடாது. ஆனால் விசேட காரணிகள் இருப்பின் மேற்கூறப்பட்ட முறையைப் பின்பற்றாது முன்னுரிமை அடிப்படையில் அரச காணிகளை குத்தகைக்கு வழங்க முடியும்.**

பின்வரும் சந்தர்ப்பங்களில் மாத்திரமே முன்னுரிமையை அரச காணிகள் குத்தகைக்கு விடப்படும். அமைச்சரின் அங்கீகாரத்தின் பிரகாரம் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தர்ம கல்வி, சனரஞ்சக சமய அல்லது விஞ்ஞான தேவைகளுக்காக அல்லது அத்தகைய நோக்கத்திற்காக சம்பந்தப்பட்ட அரச காணி தேவைப்படுமிடத்து. மேலும் சொற்பொழிவு மண்டபங்கள், சனசமூக நிலையங்கள், நெசவு நிலையங்கள் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக மற்றும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற நிறுவனங்களுக்கு காணி தேவைப்படுமிடத்து அல்லது அலுவலகமொன்றை அல்லது களஞ்சிய கூடத்தை நிர்மாணிப்பதற்காக கிராம முன்னேற்ற கூட்டுறவுச் சங்கமொன்றிற்கு" காணி தேவைப்படுமிடத்து அரச காணிகள் நீண்டகாலக் குத்தகைக்கு வழங்கப்படலாம்.

மேலும் பாற்சபை, மக்கள் வங்கி, இலங்கை வங்கி ஆகிய அரச தொடர்பு நிறுவனங்களுக்கு காணி தேவைப்படுமிடத்து அல்லது ஏதேனும் விசேட சபைக்கு முன்னுரிமை குத்தகையொன்றை வழங்கப்பட வேண்டுமென்ற ஏதேனும் சட்டத்தினால் விதிக்கப்பட்டிருக்குமிடத்து (1957 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க மோட்டார் வாகன போக்குவரத்துச் சட்டத்தின் 25ம் பிரிவின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்படும். குத்தகையை இதற்கு உதாரணமாகக் கூறலாம்).

இவை தவிர வர்த்தக அல்லது கைத்தொழில் அல்லது விவசாய கருத்திட்டங்களை தாபித்தல் போன்ற தேவைகளுக்கும் அரச காணிகள் முன்னுரிமை முறையில் நீண்ட காலக் குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

அரச காணிகளை அத்துமீறிக் குடியேறியவர்களை அக் காணியிலிருந்து, அகற்ற முடியாத சந்தர்ப்பங்களில் அல்லது அவ்விதம் அகற்றுவது பல சங்கடங்களுக்கு ஏதுவாகும் சந்தர்ப்பங்களில் அத்துமீறிக் குடியிருப்பவர்களுக்கு அக் காணியை குத்தகையாக வழங்குவது பற்றி கவனிப்பதற்கு அரச காணி தொடர்பான நடவடிக்கைக் கோவையில் கூறப்பட்டுள்ள தகவல்களுக்கமைய பிரதேச செயலாளரினால் விதப்புரை மற்றும் அறிக்கை சமர்ப்பித்து அதன்படி வழங்கப்படலாம்.

(தொடரும்...)

# பல்கலைக்கழகங்களில் அதிகரித்துவரும் பகிடிவதை

# தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது

- **பெரதெனியாவில் சித்திரவதைக்கூடம் கண்டுபிடிப்பு**
- **கடந்த 2 ஆண்டுகளில் 2,000 மாணவர்கள் இடைவிலகல்**

## பல்கலை.மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் பகிடிவதையை (ராகிங்) எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பில் சட்டமா அதிபரின் உதவியை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நாடியுள்ளது. இது தொடர்பாக கருத்து தெரிவித்த. மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் மொகான் டி சில்வா, அதிகரித்துவரும் பகிடிவதையை எவ்வாறு கட்டுப்படுத்துவது என சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்டதாக தெரிவித்தார். இது ஒரு தேசிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. 1978 ஆம் ஆண்டின் பல்கலைக் கழகத்தின் சட்டத்தின்படி மாணவர்கள் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை என்பது பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பேரவை உறுப்பினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது எனத் தெரிவித்தார்.

றுகுணு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவன் கடந்த வாரம் கடுமையான பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டநிலையில் பல்கலைக்கழக துணைவேந்தரிடம் புகார் அளித்ததாக தெரிவித்தார். எனினும், இந்த விடயத்தில் தனக்கு அதிகாரம் இல்லை என்று துணைவேந்தர் தெரிவித்ததோடு, பொலிஸில் புகார் அளிக்குமாறு மாணவனுக்கு தெரிவித்தார். மாணவர்கள் பகிடிவதை என்ற போர்வையில் செய்த சித்திரவதை கூடங்கள் பல்கலைக்கழகங்களுக்குள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அத்தகைய ஒரு சித்திரவதை அறை பெரதெனியா பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருட காலப் பகுதியில் பல்கலைக்கழகங்களில் பதிவை மேற்கொண்ட 2,000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பகிடிவதை அச்சுறுத்தல் காரணமாக பல்கலைக்கழக படிப்பை பாதியில் விட்டு விட்டு வெளியேறிவிட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இந்தச் சம்பவங்களைக் கண்காணிக்க பல்கலைக்கழக மானியங்கள் சிறப்புக் குழு ஒன்று நிறுவப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். இந்தப் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக விவாதம் நடத்த அனைத்து துணைவேந்தர்கள், பேரவை உறுப்பினர்கள், மனித உரிமைகள் ஆணையகம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகளுடன் ஒரு சந்திப்புக்கு நாங்கள் அழைப்பு விடுத்துள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.(இ-7)

# மருந்து வகைகளுக்குத்தட்டுப்பாடா? குற்றச்சாட்டுக்களை மறுக்கிறார் ராஜித

## வைத்தியர்களுக்கு கடும் எச்சரிக்கை



(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் ராஜித சேனாரட்ன மறுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் அண்மையில் தெரிவித்திருந்தனர்.

இந் நிலையில் இதுகுறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அமைச்சர் ராஜித சேனாரட்ன மறுப்புத் தெரிவித்தார்.

'வைத்தியசாலைகளில் எந்த வித மருந்து வகைகளுக்கும் தட்டுப்பாடில்லை.

சில வைத்தியசாலைகளில் பணியாற்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்துவ வைத்தியர்கள் மற்றும் சில ஊழியர்கள் அரசியல் நோக்கத்தின் அடிப்படையில் மக்களைச் சிரமங்களுக்கு உள்ளாக்கும் நோக்கில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு இருப்பதான நிலையைத் தோற்று வித்துள்ளனர். இவ்வாறான வைத்தியர்களுக்கும் ஊழியர்களுக்கும் எதிராகக்கடும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என ராஜித எச்சரிக்கை விடுத்தார். (இ-7)


உங்கள் வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

தொலைபேசி 222 3378, 021 221 7603

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

20 ஆண்டு நிறைவை நோக்கிப் பயணிக்கிறது...

உங்கள் ஆசியும் அரவணைப்பும் இலட்சக்கணக்கான வாசகர் சேனையுடன் 20.12.2019 இல் 20 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடவுள்ளது. இருபது ஆண்டு காலப் பயணத்தில் நடுவுநிலையுடன் அதிக வாசகர்களைக் கொண்ட, விற்பனையில் முன்னனி என்ற பெருமைகொண்ட ஒரே நாளிதழாக வலம்புரி வியாபகம் பெற்றுள்ளது.

விற்பனையில் சாதனை படைத்திருக்கும் வலம்புரியின் விற்பனைக் கணக்கெடுப்பை வலம்புரி விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கணக்கெடுங்கள். அப்போது உண்மை புரியும்.

இருபது ஆண்டு நிறைவில் உங்கள் வலம்புரி விசேட சலுகைக் கட்டணத்தில்

01.08.2019 தொடக்கம்

விளம்பரங்களை வெளியிடத் தீர்மானித்துள்ளது. தமிழர் தாயகம் எங்கும் வியாபித்துள்ள உங்கள் வலம்புரி 20 ஆண்டு நிறைவில் இன்னும் புதுப்பொலிவுடன் உங்களைச் சந்திக்கும்.

# புதிய இராணுவத் தளபதி இம்மாதத்துக்குள் நியமனம்

(கொழும்பு)

இராணுவத் தளபதியின் சேவைக் காலம் இம்மாதம் 18 ஆம் திகதியுடன் நிறைவடைவதாகவும் இம்மாதத்துக்குள் புதிய இராணுவத் தளபதி ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேன நாயக்க கடந்த 2017 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 4 ஆம் திகதி இலங்கையின் 22 ஆவது இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

இவரின் 55 வயது நிறைவையடுத்து 2017 ஓகஸ்ட் 18 ஆம். திகதி ஓய்வுபெறுவதற்கு இருந்தார். இருப்பினும், ஜனாதிபதியின் அதிகாரத்தைப் பயன்படுத்தி இவருக்கு முதலாவது தடவையாக ஒரு வருட சேவைக் கால நீடிப்பு வழங்கப்பட்டது. இதனையடுத்து இவர் 2018 ஓகஸ்ட் வரை இராணுவத் தளபதியாக சேவையாற்ற அவகாசம்கிடைத்தது.

பின்னர் மீண்டும் இரண்டாவது தடவையாகவும் ஒரு வருடத்தால் இவரது சேவைக் காலம் நீடிக்கப்பட்டது. இரண்டாவது முறை நீடிக்கப்பட்ட சேவைக் காலம் இம்மாதம் 18 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இதேவேளை, புதிய கூட்டுப் படைகளின் தளபதி பதவியும் இம்மாதம் வெற்றிடமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. தற்போதைய கூட்டுப் படைகளின் கட்டளைத் தளபதியாகவுள்ள அட்மிரல் ரவீந்திர விஜே குணரத்னவின் சேவைக் காலம் இம்மாதம் 22 ஆம் திகதி நிறைவடையவுள்ளதாகவும் சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# அதிநவீன வாகனத்தால் பாரிய அச்சுறுத்தல்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் கண்டு பிடிக்கப்பட்ட அதிநவீன தொழில்நுட்பத்துடன் கூடிய வாகனத்தால் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிங்கள ஊடகம் செய்தி (Mawbima.lk) வெளியிட்டது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவு நடத்திய விசாரணையின் போது குறித்த வாகனம் கண்டு பிடிக்கப்பட்டது.

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா பணியாற்றிய காலப்பகுதியில் ஜப்பானின் உதவியுடன் அதிக தொழில்நுட்பங்களைக் கொண்ட வாகனம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் பல கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள ஒருவரை கண்காணிக்கக்கூடிய திறன் கொண்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ட்ரோன் கமரா ஒன்று உள்ளடக்கப்பட்ட கமரா கட்டமைப்பு ஒன்றும் அந்த வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலகுவாக எந்தவொரு நபரையும் அடையாளம் காண முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதில் விசேட கணனி கட்டமைப்பும் பொருத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கொலை செய்வதற்காக முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா சூழ்ச்சி செய்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைக் குழுவால் இந்த வாகனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

அதிக தொழில்நுட்ப திறன் கொண்ட இந்த வாகனம் தொடர்பில் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆசு மாரசிங்கவால், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பதில் இயக்குநரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது, ஜப்பானின் தொழில்நுட்ப உபகரணங்கள் உள்ளடக்கப்பட்ட வாகனம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாகவும் 25 கிலோ மீற்றர் தூரத்தில் இருந்து அதனைக் கண்காணிக்க முடியும் எனத் தெரிவித்தார். (இ-7)

# கோத்தா கலந்து கொண்ட டுபாய் நிகழ்வில் உதயங்க



(டுபாய்)

இன்டர்போலால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க, டுபாயில் கோத்தபாய ராஜபக்ஷ கலந்துகொண்ட நிகழ்வொன்றில் பங்கேற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை டுபாய் ரடிசன் ப்ளு ஹோட்டலில் நடைபெற்ற "எலிய" அரசியல் பிரசார நிகழ்விலேயே உதயங்க கலந்துகொண்டிருந்தார் என்றும் அதில் 33 இற்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கெடுத்திருந்ததாகவும் தெரிய வருகிறது. இதில் பங்கேற்றிருந்த உதயங்க வீரதுங்க கட்டம் போடப்பட்ட சேர்ட் ஒன்றை அணிந்து ஆட்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தமை சமூக வலைத்தளங்களில் பரவியுள்ள வீடியோ காட்சியில் காணப்படுகிறது. இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட சிவில் அமைப்பே "எலிய" ஆகும்.

2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொழும்பு நீதவான், உதயங்க வீரதுங்கவை கைது செய்வதற்கு இன்டர்போலின் சிவப்பு எச்சரிக்கையைப் பெறுவதற்குப் பணிப்புரை விடுத்திருந்தார். இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான நான்கு மிக்27 ரக விமானங்களை 2006 ஆம் ஆண்டு கொள்வனவு செய்த போது இடம்பெற்ற நிதி மோசடி மற்றும் முறைகேடுகள் தொடர்பில் அவர் தேடப்பட்டு வருகிறார். இந்த வழக்குத் தொடர்பில் தான் கைதுசெய்யப்படுவதைத் தடுக்கும் நோக்கில் உச்சநீதிமன்றத்தில் ஆணையைப் பெற்றிருந்தார்.


உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் உதயங்க வீரதுங்கவுக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட போதும் அவர் சுதந்திரமாக வெளிநாடுகளில் நடமாடுவதாக குற்றம்சாட்டப்படுகிறது. முதலில் ரஷ்யாவிலிருந்த இவர் அங்கிருந்து டுபாய் நாட்டுக்குச் சென்றிருந்தார். இவருக்கு எதிராக ஐக்கிய அரபு இராச்சிய நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு வழக்கொன்றுள்ளது.

அபுதாபி நீதிமன்றத்தில் இவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது இலங்கை அரசாங்க அதிகாரிகளோ அல்லது சட்டத்தரணிகளோ நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருக்காமையால் இவ்வழக்கு கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1796


### அர்ஜூன்

**உப்பும் உரிமையும் அதிகம் எடுத்தால் உணவும் உறவும் கசந்து போகும்**



### ஜானகி

**எங்களை மனிதனோடு ஒப்பிடாதீர்கள். நாங்கள் அவர்களைவிட நன்றியுடையவர்கள்**



### சந்தோஷ்

**பல அவமானங்களை கடக்கும் ஒருவன் மனதில் ஓடும் ஒரே வாசகம் நான் ஒருநாள் ஜெயிப்பேன்**



### நிர்மலா

**மனைவியிடம் பொய் சொல்லாதீங்க... ஏன்னா அவங்க உண்மையை தெரிஞ்சு வச்சுட்டுத்தான் கேள்வியே கேட்பாங்க**




### ஆர்த்தி

**அன்று காசில்லாமல் வேடிக்கை பார்த்தேன்... இன்று காசிருந்தும் கூச்சத்தால் வேடிக்கை பார்க்கிறேன்**



### நந்தினி

**தாங்கிப் பிடிக்க தாயும் தூக்கி நிறுத்த தந்தையும் இருக்கும் வரை எந்த உறவும் வீழ்ந்து போவதில்லை**



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தனி நபர்களுக்கு அதிகாரத்தை வழங்க எவரும் வாக்களித்துவிடக் கூடாது

## அநுரகுமார அறிவுரை

(மாத்தறை)

**அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தனி நபர்களுக்கு அதிகாரத்தை வழங்கும்பொருட்டு, எவரும் வாக்களித்து விடக் கூடாது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவுரை வழங்கினார்.**

மாத்தறையில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சாதாரணமாக முன்னரெல் லாம் தேர்தல் காலத்தில்தான் தேர்தல் சமர் இடம்பெறும்.


ஆனால், இப்போது அது மாற் றமடைந்து தேர்தலுக்கு முன் னரே கட்சிகளுக்குள் முரண் பாடுகள் ஏற்பட்டுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி உடன்பாடொ ன்றை ஏற்படுத்தி பாரிய கூட்டணி யுடன் தேர்தலில் களமிறங்கு வோம் என்று அறிவித்தது.

நேற்று 5 ஆம் திகதி ஜனா திபதி வேட்பாளரை அறிவிப்ப தாகவும் அந்தக் கட்சி கூறியது. ஆனால், தற்போது பிரச்சினை கள் காரணமாக அனைத்தும் இல்லாது போய்விட்டது.

ஜனாதிபதி வேட்பாளர் தொட ர்பாக இன்னும் அங்கு போட்டி த்தன்மை நிலவிக்கொண்டு வருகிறது. அதேபோல், மகிந்த ராஜபக்ஷவும் இன்னும் தமது தரப்பில், ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு செய்யப்படவில்லை என்று கூறிவருகிறார்.

கோத்தபாய ராஜபக்ஷவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதே தவிர, இன்னும் இறுதித் தீர் மானம் அங்கு எடுக்கப்படவி ல்லையாம். உண்மையில், வேறு ஒருவரை ஜனாதிபதி வேட் பாளராக அறிவிக்க மகிந்தவுக்கு விருப்பமில்லை.

அவரைப் பொறுத்தவரை அவர் மட்டும்தான் இந்த நாட்டை ஆட்சி செய்ய வேண்டும். இனி மேல் இந்தத் தரப்புக்களை நம் பிப் பலன் இல்லை. தனித்தனி நபர்களுக்கு அதிகாரத்தைக்



கையளிப்பதை விடுத்து, அனை வரும் இணைந்து ஒரு பொது வான நிலைப்பாட்டுக்கு வர வேண்டும்.

பிரேமதாஸவின் பின்னால் சென்றோம். பின்னர் சந்திரிகா வின் பின்னால் சென்றோம். அடுத்ததாக மகிந்த, ரணில் என அனைவரின் பின்னாலும் சென் றுவிட்டோம். எனினும், நாட்டை அபிவிருத்தி செய்ய எம்மால் முடி யாமல்தான் போனது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையை மையமாக வைத்து அமெரிக்கா எச்சரிக்கை விடவில்லை

## பாதுகாப்புச் செயலர் சாந்த விளக்கம்



(கண்டி)

பாதுகாப்பு தொடர்பில் அமெ ரிக்கத் தூதரகம் விடுத்த எச்ச ரிக்கையானது இலங்கையை மையப்படுத்தி அறிவிக்கப்பட வில்லை என அமெரிக்கத் தூத ரகம் தெரிவித்தது எனவும் நீண்ட விடுமுறை அல்லது உற்சவகால ங்களில் சுற்றுலாப் பயணிகளு க்காக விடுக்கப்படுகின்ற அந் நாட்டின் பொதுவான அறிவித் தலே இது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜென ரல் சாந்த கோட்டேகொட தெரி வித்தார்.

இவ்வாறான அறிவிப்பை சமூக ஊடகங்கள் மூலம் வெளி யிடுவது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ள தாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி எசல பெரஹர உற்ச வத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கண்டி ஸ்ரீதலதா மாளிகையில் பாதுகாப்புப் பிரதா னிகள் மற்றும் பல முக்கியஸ்தர் கள் மத்தியில் இடம்பெற்ற கலந்து ரையாடலில் பாதுகாப்புச் செயலா ளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட அறிவிப்பு குறி த்து பாதுகாப்புப் பிரிவினர் கவ னமாக அவதானித்து வருகின் றனர். மேலும் பாதுகாப்பு அமை ச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இது குறித்து ஆராய்ந்ததாகவும் தெரிவித்தார். இந்த வகையில் மக்களின் பாதுகாப்பு கருதி முழு மையான உயர்ந்தபட்ச பாதுகாப் புக்கு நடவடிக்கை எடுக்கப்படுவ துடன் மேலும் இதுபோன்ற அறி விப்புகளைப் பாதுகாப்புப் படை யினர் ஒருபோதும் புறக்கணிக்க மாட்டார்கள் எனவும் தெரிவித் தார். இலங்கைக்கு சுற்றுப் பய ணம் செய்வதில் வெளிநாட்டவர் களுக்கு எந்தவொரு அச்ச உணர் வுகளும் இருக்கக் கூடாது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியினர் இலங்கைக்கு விஜ யம் செய்ய பயந்தார்கள். ஆனால் எதுவும் நடக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க துணைத் தலைவி மீது தாக்குதல்

(பனிக்கன்குளம்)

வடக்கு-கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் துணைத்தலை வரும் மட்டக்களப்பு மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் தலைவி யுமான அமல நாயகி மற்றும் அவரது மகள் மீதும் இனந் தெரியாத நபர்கள் நேற்று முன் தினம் மாலை மோட்டார் சைக் கிளால் மோதி தாக்குதல் மேற் கொண்டுள்ளதாக கரடியனாறு பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மரண வீடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக உந்துருளியில் தனது மகளுடன் மட்டக்களப்பு உன்னிச்சை வீதியில் பயணி த்துக் கொண்டிருந்த சமயம் எதிர்த்திசையில் வருகை வந்த மூன்று பேர் அடங்கிய குழுவின ரால் வேண்டுமென்றே மோதி விபத்து ஏற்படுத்தப்பட்டு காயம டைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

தாம் எதிர்த்திசையில் வரு வதை அறிந்து வேண்டுமென்றே தனது உந்துருளியை நோக்கி எதிரே வந்தவர்கள் செலுத்திய தாகவும் அதன்போது விபத்தை ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்று விட்டதாகவும் பொலிஸாரிடம் அவர் தெரிவித்தார்.

மோதிவிட்டு தப்பிச் சென்றவர் களை பிரதேச இளைஞர்கள் மடக்கிப்பிடித்த சமயத்தில் ஏனைய இருவரும் தப்பிச் செல்ல ஒருவர் பிடிபட்டு மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (9-28)

# செய்தித்துளிகள்

## ஞாபகார்த்த இல்லம் திறப்பு



(பெல்லன்வில)

வரலாற்று முக்கியத்துவ மிக்க பெல்லன்வில ரஜமகா விகாரையின் (யதிவர சமரு பஹய) ஞாபகார்த்த இல்லத்தை திறந்து வைக்கும் நிகழ்வு ஜனா திபதி மைத்திரிபால சிறிசேன வின் பங்குபற்றுதலுடன் நேற்று முன்தினம் முற்பகல் இடம் பெற்றது. (இ-7)

## ஓவியச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

அரச சிறுவர் ஓவியப் போட் டியின் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.நல்லூர் சென் பெனடிக் வித்தியாலயத் தில் இடம்பெறும் என யாழ். மாவட்ட கலாசார உத்தியோக த்தர் எஸ்.கிருஷ்ணகுமார் தெரி வித்தார்.

தேசிய வீடமைப்பு நிர்மாண த்துறை மற்றும் கலாசார அலு வல்கள் அமைச்சு, கலாசார அலு வல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புல கலை ஆலோச னைக்குழு ஆகியன ஒன்றி ணைந்து குறித்த போட்டிக்கான ஒழுங்குகளை ஏற்பாடு செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (5-10)

## காணொலிக் காட்சியும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக நுண் கலைத்துறை வெறுவெளி அரங்கக் குழுவினரின் ஒரு பொம்மையின் வீடு, நாடக ஆற்றுகையின் திரை வடிவக் காணொலிக் காட்சியும் கலந் துரையாடலும் எதிர்வரும் 8 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாச பதி கலையரங்கில் இடம்பெற வுள்ளது. (5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 70 | 120 |
| பச்சைமிளகாய் | 240 | 240 | 400 |
| தக்காளி | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 100 | 80 |
| கோவா | 80 | 55 | 80 |
| கரட் | 160 | 200 | 160 |
| பூசணி | 60 | 60 | 80 |
| புடோல் | 60 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 160 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 100 |
| பயற்றங்காய் | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 80 | 60 | 100 |
| பீற்றூட் | 80 | 60 | 100 |
| கறிமிளகாய் | 160 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 70 | 80 |
| போஞ்சி | 160 | 110 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 300 | 240 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 180 | 140 | 200 |
| வெங்காயப்பூ | 160 | 110 | 200 |
| முள்ளங்கி | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 50 | 120 | 60 |




# ராஜாவும் முட்டாள் குரங்கும்



வேதபுரி என்ற நாட்டை அரசர், ஒருவர் ஆண்டு வந்தார். அவர் தனக்கு பரிசாகக் கிடைத்த குரங்கு ஒன்றை ஆசையாக வளர்த்து வந்தார். அந்தக் குரங்கும் அந்த அரசரின் மீது மிகவும் பாசமாக இருந்தது.

ஒருநாள் ராஜா வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவப் போகும் பொழுது குரங்கையும் கூடவே அழைத்துச் சென்றார்.

செல்லும் வழியில் ஒரு முட்புதருக்கு நடுவில் பாம்பு ஒன்று இருப்பதை குரங்கு கவனித்தது. உடனே அந்தக் குரங்கு தாவி குதிச்சு பாம்பு இருப்பதை ராஜா விடம் காண்பித்தது. அந்த பாம்பு ராஜாவை கடிக்கும் முன்பு குரங்கு பாம்பிடம் சண்டையிட்டு பாம்பைக் கொன்றது.

சரியான சமயத்தில ராஜா, பாம்புக் கடியிலிருந்து தப்பித்தார். குரங்கின் எச்சரிக்கை உணர்வையும் விசுவாசத்தையும் பார்த்து ராஜா மிகவும் நெகிழ்ந்தார்.

உடனே, அந்தக் குரங்கையே தன்னோட பாது காவலரா நியமிக்க முடிவு செய்தார். அவரோட இந்த முடிவைக் கேட்ட அமைச்சர்கள் அனைவரும் திகைத்து நின்றனர்.

அவர்கள் ராஜாவிடம், 'ராஜா என்னதான் இருந்தாலும் அது ஒரு விலங்கு தானே! அதுக்கு மனிதர்கள் மாதிரி பகுத்தறிவோ, முடி வெடுக்கும் திறமையோ இருக்காதே! உங்களோட இந்த விபரீத எண்ணத்தை மாத்திக்கங்க'ன்னு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாங்க.

ராஜா கேட்கறதா இல்லை. 'என்னைப் பொறுத்தவரைக்கும் ஒரு அந்தரங்கப் பாதுகாவலனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி பாசமும், விசுவாசமும்தான்! அது என் குரங்குகிட்ட நிறையவே இருக்கு! அதனால என் பாது காவலுக்கு மனிதர்கள் வேண்டாம். குரங்கே போதும்'னு தீர்மானமா சொல்லிட்டார்.

அன்று முதல் குரங்கு, ராஜாவை விட்டு ஒரு நிமிஷம்கூட விலகாம அவர் எங்கு போனாலும் கூடவே போறதும் வர்றதுமா இருந்தது.

ஒரு நாள் ராஜா குரங்கிடம் 'எனக்கு தூக்கம் வருகின்றது. நான் கொஞ்ச நேரம் நல்லா தூங்கப் போறேன். என்னை யாரும் தொந்தரவு செய்யாம பார்த்துக்க'ன்னு சொல்லிட்டு தூங்க ஆரம்பித்தார்.

குரங்கும் ரொம்ப அக்கறையா, படுக்கைக்குப் பக்கத்திலேயே இருந்து காவல் காத்தது. அந்தச் சமயம் பார்த்து அங்க ஒரு ஈ வந்தது. அது ராஜா காது கிட்ட வந்து 'ஸொய் ஸொய்'ன்னு கத்தி ராஜாவை தொந்தரவு செய்தது. குரங்கு 'சூசூ'ன்னு துரத்துச்சு.

கொஞ்ச நேரம் கழிச்சு, அந்த ஈ திரும்பவும் அங்கேயே சுத்தி சுத்தி வந்துக்கிட்டே இருந்தது. குரங்குக்கு கோபம் தாங்கல. ஈக்குத் தகுந்த பாடம் புகட்டணும்னு தீர்மானிச்சுச்சு. அது ராஜாவோட வாளை கையில் எடுத்தது. இந்த முறை ஈ வந்தா அதை ஒரே போடு போட்டு ரெண்டு துண்டாக்கிட வேண்டியதுதான்னு முடிவு செய்தது.

நடப்பது எதுவும் தெரியாத ராஜாவோ பாவம் நிம்மதியா தூங்கிக்கிட்டிருந்தாரு. ஈ திரும்பவும் வந்தது. இந்தத் தடவை அது ராஜாவோட கழுத்துக்கு மேல பறந்தது.

தயாராக இருந்த அந்த குரங்கும் ஈயை ஒரே வெட்டா வெட்டிடுச்சி. ஐயோ! என்ன பரிதாபம்! ஈ பறந்து தப்பிச்சிடிச்சு.

ராஜா தலை துண்டாகிப் போச்சு. இப்படியாக, ராஜா தன்னோட சொந்த பாது காவலனாலயே கொல்லப்பட்டுட்டாரு.

ராஜா இறந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு அந்த நாட்டு மக்களும், அமைச்சர்களும் சோகத்தில மூழ்கிட்டாங்க.

அவங்க 'புத்திசாலியான எதிரியைவிட முட்டாளான தோழன்தான் ரொம்ப ஆபத்தானவன்'னு ராஜாவுக்குத் தெரியாமல் போய் விட்டதே என்று புலம்பினார்கள்.

## விடுகதைகளும் விடைகளும்

• மழைக்கும் இடம் உண்டு, மன்னர் படைக்கும் இடம் உண்டு. அது என்ன?

**மரத்தடி**

• இரண்டு கால் உயிர்களுக்கு, மூன்று காலன் இருக்க உதவுவான். அவன் யார்?

**முக்காலி**

• அச்சு இல்லாத சக்கரம், அழகை கூட்டும் சக்கரம். அது என்ன?

**வளையல்**

• சுற்றி சுற்றி சூட்டைப் போக்கினாள். அவன் யார்?

**மின்விசிறி**

• என்னில் உன்னைக் காணலாம். நான் யார்?

**கண்ணாடி**

• முதலில் ஒலிப்பான், பிறகு உரைப்பான். அவன் யார்?

**தொலைபேசி**

• அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன?

**தண்ணீர்**

• ஐவர் வீட்டுக்கு பொதுவாய் ஒரு முற்றம். அது என்ன?

**உள்ளங்கை**

• வால் உள்ள பையன் காற்றில் பறக்கிறான். அவன் யார்?

**பட்டம்**

## பழமொழியும் விளக்கமும்

**• பருவத்தே பயிர்செய்**

ஔவையாரின் அமுத மொழி இது. "பருவம்" என்பது குறிப்பிட்ட காலத்தைக் குறிக்கிறது. உரிய காலத்தில் எந்தச் செயலையும் செய்தல் வேண்டும். இல்லையென்றால், எதிர்பார்த்த பலன் கிடைக்காது. படிக்கிற பருவத்தில் செம்மையாக படிக்க வேண்டும். அதேபோல அந்தந்தப் பருவத்தில் பயிர்களை விதைத்து, மழை, காற்றில் வீணாகாமல் பருவத்தே அறுவடை செய்ய வேண்டும். இதுபோன்ற காலம் தவறாமல் செய்ய வேண்டிய கடமைகளை சரியாக செய்ய வேண்டும் என்பதையே இந்த பழமொழி உணர்த்துகிறது. "இளமையில் கல்", "ஆடிப்பட்டம் தேடி விதை" என்பன போன்ற பழமொழிகளும்இதே கருத்தையே வலியுறுத்துகின்றன.

## நற்சிந்தனைகள்

• உங்கள் எண்ணங்கள் எப்படியோஅப்படித்தான் வாழ்க்கையும் அமையும். எனவே சிறந்ததையே எண்ணுங்கள்.

• அதிகம் பேசாதவனை உலகம் அதிகம் விரும்புகிறது. அளந்து பேசுபவனை அதிகம் மதிக்கிறது. அதிகம் செயற்படுபவனையே கைகூப்பித்தொழுகிறது.

• உங்கள் எண்ணம் பண்பட்டு இருந்தால் உங்களுக்கு கெட்ட எண்ணங்களே தோன்றாது. இதனால் உங்கள் சொல்லும், செயலும் தன்னாலேயே பண்பட்டுவிடும். இதனால் உங்கள் எண்ணங்களின் மேல் அதிக கவனம் செலுத்த வேண்டியது இன்றியமையாதது.

• நமது சொல் அல்லது செயலுக்கு மூலகாரணியாக இருப்பது நம் எண்ணமே. நாம் எதையும் சொல்லும் முன்போ அல்லது எதையும் செய்யும் முன்போ அதற்கான உந்துதல் முதலில் நம் எண்ணத்தில்தான் உருவாகிறது.

• உருவத்தில் எப்படி இருந்தாலும் உள்ளத்தில் குழந்தையாய் இரு. இந்த உலகமே உன்னை நேசிக்கும்.

• எல்லாக் காயங்களுக்கும் ஒரு மருந்து, குழந்தைகளின் புன்னகை என்னும் அருமருந்து.

• மனதில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும்.

முருகா முருகா நல்லூர் முருகா யாழ்ப்பாணப் பெருமையினை காத்தருள் முருகா

*முருகன் பாடல்*

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## தமிழ்த் தலைவனின் தனிப் பெரும் திருவிழா

நல்லூர்க் கந்தப்பெருமானின் கொடியேற்றம் இன்று ஆரம்பமாகின்றது.

உலகம் முழுவதிலும் வாழுகின்ற ஈழத்தமிழர்களின் தனிப்பெரும் தலைவனாக, தமிழ்க் கடவுளாக விளங்கும் நல்லூர்க் கந்தப் பெருமானின் பெருவிழாக்காண புலம்பெயர் உறவுகள் வந்து கூடுகின்ற காலம்.

நல்லூர்க் கந்தனின் கொடி ஏறிவிட்டால் எங்கள் மண் விழாக் கோலம் பூண்டு விடும். எங்கும் பக்திப் பரவசம். விரத அனுஷ்டிப்புகள். அங்கப் பிரதட்சணங்கள். நல்லூர் முருகனுக்கு அரோகரா என வானதிரும் கோசங்கள் என எங்கும் பக்தி மயத்தை, தெய்வீகத்தை தந்து நிற்கும் புதியதொரு சூழமைவு இயல்பாகவே ஏற்பட்டு விடும்.

அதிலும் வைகறைப் பொழுதில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நல்லூரான் திருவீதியை தங்கள் உடலால் அங்கப் பிரதட்சணம் செய்கின்ற காட்சி எங்கும் காணுதற்கரியது.

முருகா! என்றும் கந்தா! என்றும் வேலா! என்றும் உச்சாடனம் செய்தபடி நல்லூர்க் கந்தனின் பெரு வீதியாய் விரிந்து பரந்திருக்கும் வெளிவீதியை உடலால் வலம் வருகின்ற அற்புதத்தை எடுத்துரைக்க மனித மொழி ஏதுமில்லை.

இவை ஒருபுறமிருக்க, பண்ணிசைப்பவர்கள் அடியார் திருக்கூட்டமாகப் பஜனைப் பிரார்த்தனை செய்கின்ற பாங்கும் விசேட திருவிழாக்களின்போது இடம்பெறும் காவடி நேர்த்திகளும் என எல்லாமும் பக்தி வயப்பட்டதாக அமைவது எங்கள் தமிழ் இனத்துக்குத் தனிப் பெருமை தருவதாகும்.

இவற்றுக்கு மேலாக, நல்லூர்க் கந்தனின் மகோற்சவ காலங்களிலும் ஏனைய நாட்களிலும் வெளிநாட்டவர்களும் சிங்கள மக்களும் நல்லூர் முருகனைத் தரிசிக்க வருவது கண்டு வியப்புறாமல் இருக்க முடியாது.

குறிப்பாக வெள்ளையர்கள் நல்லூர் முருகனை வந்து பார்க்கின்ற பாங்கை அவதானித்தால், முருகனையும் அவன் ஆலயச்சூழலையும் ஏற்கெனவே பார்த்த ஞாபகத்தினால் அதிசயத்தவர்கள்போல் அவர்களின் விழிப்பும் முக விரிப்பும் குறியீட்டு மொழியாய் உணர்த்தி நிற்கும்.

முன்னம் ஒருபோதும் நல்லூருக்கு வராத வெளிநாட்டவர்களுக்கு நல்லூர் முருகனின் சூழல் ஞாபகத்துக்கு உரியதாகிறதெனின், முன்னைய பிறப்பில் இவர்கள் இலங்கைக்கு வந்த குடியேற்றவாதிகளோ என்று எண்ணுவதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

இத்துணை பெருமைக்குரிய நல்லூர் முருகனின் மகோற்சவம் சிறப்பாக நடைபெற அனைத்து வழிகளிலும் நாம் அனைவரும் உதவ வேண்டும்.

அதிலும் குறிப்பாக ஆசாரத்துடனும் எங்கள் பண்பாட்டு விழுமியத்துடனும் ஆலயச் சூழலில் எங்கள் பிரசன்னம் இருக்குமாயின் சோதனை நடவடிக்கைகளும் தேவையற்றவையாகிப் போகும்.

ஆகையால் எங்களின் உணர்வுபூர்வமான பங்களிப்புகள் நல்லூர்க் கந்தப் பெருமானின் பெருந்திருவிழா சிறப்பாக அமைய நிச்சயம் உதவும். இந்த உண்மையை உணர்ந்து செயற்படுவோமாக.

# ஐ.தே.கவுடன் சு.க. இனி இணையாது மகிந்த அணியுடனும் சாத்தியமில்லை

## சஜித்தை ஜனாதிபதியாக்கும் அவசியமும் இல்லை- தயாசிறி

(கொழும்பு)

அமைச்சர் சஜித் பிரேமதாஸவுடன் இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புதிய கூட்டணியை உருவாக்கவுள்ளதாக வெளியான செய்திகளில் எவ்விதமான உண்மைத் தன்மையும் இல்லை.

அவ்வாறு சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்க வேண்டிய அவசியம் சுதந்திரக் கட்சிக்கு கிடையாது எனத் தெரிவித்த அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர, பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி சாத்தியமாவதற்கு வாய்ப்பில்லை. தனித்து பயணிப்பது தொடர்பாக மத்திய குழுக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

மைத்திரி - சஜித் புதிய கூட்டணி குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் போது சஜித் பிரேமதாஸவை பிரதமராகப் பதவியேற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார். இதனை அடிப்படையாகக் கொண்டே இவ்வாறான உண்மைக்கு புறம்பான செய்திகள் பரப்பப்படுகின்றதாகவும், தற்போது ஐக்கிய தேசிய கட்சிக்குள் ஜனாதிபதி வேட்பாளர் குறித்து முரண்பாடுகள் எழுந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மீண்டும் ஐ.தே.கவுடனோ அல்லது சஜித்துடனோ இனியொரு போதும் சுதந்திரக் கட்சி இணையாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாக வுள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஞானசார தேரருக்கு எதிரான வழக்கில் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்க நீதிபதி நினைவுபடுத்தல் உத்தரவு

(கொழும்பு)

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு தொடர்பில் சட்டமா அதிபர் ஆலோசனை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி லங்கா ஜயரத்ன முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் குறித்த வழக்கு டிசெம்பர் 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் நீதிபதி அறிவித்தார்.

இஸ்லாம் மார்க்கம் மற்றும் அல்குர்ஆன் ஆகியவற்றுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் ஞானசார தேரர் கருத்து வெளியிட்டதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக இதுவரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனை கிடைக்கப்பெறவில்லை என இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் அதிகாரிகள் நீதிமன்றில் அறிவித்தனர்.

இதனையடுத்து, குறித்த வழக்கு தொடர்பாக ஆலோசனை வழங்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நினைவுபடுத்தல் உத்தரவொன்றை நீதிபதி பிறப்பித்துள்ளார்.

பொலநறுவை பிரதேசத்தில் இடம்பெற்ற இரண்டு கூட்டங்களில், வெளியிடப்பட்ட கருத்துகள், இஸ்லாம் மார்க்கம் மற்றும் அல்குர்ஆன் ஆகியவற்றுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய ஞானசார தேரருக்கு எதிரான இந்த வழக்கை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயர் பொலிஸ் அதிகாரிகள் 49 பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

உயர் பொலிஸ் அதிகாரிகள் 49 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

தேசிய பொலிஸ்ஆணைக் குழுவின் அனுமதிப்படி இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டன.

இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்ட உயர் பொலிஸ் அதிகாரிகளுள் 21 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், 24 பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 4 சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் 21 பேரும் நேற்று காலை இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அதேவேளை போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு, நிதி மோசடி விசாரணை பிரிவு, பயங்கரவாத விசாரணை பிரிவு உள்ளிட்டவைகளுக்கு புதிதாக பணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இழப்பீட்டு அலுவலக கொள்கை உருவாக்கப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் கொள்கை உருவாக்கப்பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.


கடந்த 30 வருடகால யுத்தம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதுடன், யுத்தம் மற்றும் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களை எவ்வாறு இனங்காணுதல், அவர்களுக்கான இழப்பீட்டை எதனடிப்படையில் ஒதுக்கீடு செய்தல் உள்ளிட்ட விடயங்கள் தீர்மானிக்கப்படும் என்று இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் ஆணையாளர் லெப்டினன் கேர்னல் டபிள்யூ. ரத்னபிரிய பந்து தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 2018 ஒக்டோபர் மாதம் 9ம் திகதி நிறைவேற்றப்பட்ட இழப்பீட்டுக்கான அலுவலகச் சட்டத்தின் மூலம் இழப்பீட்டுக்கான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் இந்த அலுவலகத்திற்கான ஆணையாளர்கள் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இந்த அலுவலகம் செயற்பட ஆரம்பித்தது.

இந்நிலையில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- மனதை வசப்படுத்தியவன் எதற்கும் அடிமையாக மாட்டான். அவன் மனம் விடுதலை பெற்றுவிட்டது.
- மனதில் அன்பும், அமைதியும் வளர வளர சொல்லும் செயலும் செம்மை மிக்கதாக அமைந்திருக்கும்.
- மூடநம்பிக்கையைத் தூக்கி எறிந்து விடு. மரணமே எதிர் வந்து நின்றாலும் பலவீனத்திற்கு இடம் கொடுப்பது கூடாது.
- துன்பம் கற்சுவராக உன்னைக் குறுக்கிட்டுத் தடுத்தாலும் அதைப் பிளந்து செல்லும் வலிமை ஒழுக்கத்திற்கு மட்டுமே உண்டு.

# சரஸ்வதி ச.ச.நிலைய நூற்றாண்டு விழா கிரிக்கெட் போட்டி; வடக்கின் இளவரசன் ஆனது இணுவில் கலைஒளி




சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட வடமாகாண ரீதியிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இணுவில் கலைஒளி கிரிக்கெட் அணி வடக்கின் இளவரசன் பட்டத்தை வென்றது.

அமரர்கள் சுப்பிரமணியம் கௌசிகன், இதயராஜ் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட இக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி "வடக்கின் இளவரசன் யார்" எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் இணுவில் கலை ஒளி அணியும் பொற்பதி விளையாட்டுக் கழக அணியும் பலப்பரீட்சை நடத்தின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை 4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று வடக்கின் இளவரசனானது இணுவில் கலை ஒளி அணி. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்

## ரேவடி அணியினை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது நேதாஜி

வல்வை விளையாட்டுக் கழக மாலுமிகள் நடத்தும் மென் பந்தாட்ட தொடரின் பிளே ஒப் இன் Qualifier 1 போட்டியில் ரேவடி அணி நேதாஜி அணியுடன் மோதியது.

முதலில் ஆடிய நேதாஜி அணி 10 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகளை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது. 83 எனும் வெற்றியிலக்கை நோக்கி களமிறங்கிய ரேவடி அணி 10 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதன்மூலம் நேதாஜி அணி 35 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஆட்டநாயகனாக நேதாஜி அணியின் வீரர் பிரகாஷ் தெரிவு செய்யப்பட்டார். (க)



## தொழிற்பயிற்சி அதிகார சபையின் கிரிக்கெட்; கிளிநொச்சி மாவட்ட அணி 3 ஆம் இடம்



இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 24 ஆவது ஆண்டு நிறைவுக்கான வெற்றிக் கிண்ணத்துக்காக இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களிலுள்ள தொழிற் பயிற்சி நிலையங்களுக்கிடையே நடத்தப்பட்ட 6 பேர் 5 ஓவர். கொண்ட துடுப்பாட்டப் போட்டி கடந்த 2 ஆம் திகதி கொழும்பு சாளிக்க மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்திய கிளிநொச்சி மாவட்ட அணி 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (க)

## ஆணழகன் போட்டியில் முதலாமிடம்



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்ற மூத்தோர்களுக்கான ஆணழகன் போட்டியில் பங்குபற்றிய குருநகரைச் சேர்ந்த சவிரியான் மரியதாஸ் (சூரி) முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டார். (க-106)

## சோனப்பு சவாரித்திடலில் நடந்த சவாரிப் போட்டியில் வீர சாகசம்



கரவெட்டி சோனப்பு மாட்டு வண்டி சவாரித் திடலில் இடம் பெற்ற மாட்டு வண்டி சவாரிப் போட்டியில் வண்டிலில் இருந்து தூக்கி வீசப்பட்ட இருவர் தெய்வாதீனமாக காயங்களின்றித் தப்பிக் கொண்டனர்.

கரவெட்டி இளைஞர்களின் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி சவாரிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி சோனப்பு மாட்டு வண்டி சவாரித் திடலில் இடம்பெற்றது.

இதில் சவாரி மாடுகள் தலை தெறிக்க ஓடிய போது இரண்டு சவாரி வண்டில்களில் இருந்த இருவர் தூக்கி வீசப்பட்டனர்.

தெய்வாதீனமாக அவர்களுக்கு காயங்கள் ஏதும் ஏற்படவில்லை.

ஒரு வண்டிலில் இருந்து ஒருவர் தூக்கி வீசப்பட்டு நிலத்தில் உருண்டு புரண்டார்.

மற்றைய வண்டிலில் இருந்த ஒருவர் தூக்கி வீசப்பட்ட நிலையில் வண்டிலின் அடிப்பாகத்தை பிடித்தவாறு இழுபட்டுச் சென்றதையும் காண முடிந்தது. (க-60)

## திசாநாயக்க...

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாலிந்த திசாநாயக்க நேற்று காலமானார்.

உடல் நலக் குறைபாட்டால் கொழும்பு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

திடீர் உடல் நலக்குறைவு காரணமாக் சமீபத்தில் கொழும்பு பொது மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அமைச்சரை நீக்...

வரனுக்கு மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவிட்டது.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், அமைச்சுப் பதவியிலிருந்து முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தன்னைப் பதவி நீக்கியமை சட்ட ஏற்பாடுகளுக்கு முரணானது என்று கட்டளையிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் நீதிப் பேராணை மனுத்தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் முதலமைச்சர் விக்னேஸ்வரன், அமைச்சர்கள் அனந்தி சசிதரன், சிவநேசன் உள்ளிட்ட 7 பேர் எதிர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனு மீதான இறுதிக் கட்டளையை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று வழங்கியது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான மகிந்த சமயவர்த்தன, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் தீர்ப்பை வழங்கினர்.

டெனீஸ்வரனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கிய முறை சட்டத்துக்கு புறம்பானது என்றும், அவரை நீக்கி விட்டு புதிய அமைச்சர் நியமிக்கப்பட்ட முறையும் சட்ட விரோதமானது என்றும் நீதியரசர்கள் தமது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, இந்த வழக்குக்கான செலவினங்களை சி.வி.விக்னேஸ்வரனே செலுத்த வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

அதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்ற இடைக்காலக் கட்டளையைச் செயற்படுத்தத் தவறியதால், நீதிமன்ற உத்தரவை அவமதித்தார் என விக்னேஸ்வரனுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 10ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. (ம-3)

## எவ்வளவு வலு...

வியலாளரால் கேட்கப்பட்ட கேள்வி தொடர்பில் ஊடகங்களுக்கு விக்னேஸ்வரன் அனுப்பி வைத்த கேள்வி-பதிலிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுப்பி வைக்கப்பட்டுள்ள கேள்வி - பதில் வருமாறு,

ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்வி:

**டெனீஸ்வரன் வழக்கு உங்களுக்கு எதிராக இன்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். அதுபற்றி?**

நீதியரசர்கள் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்தில் எடுக்கவில்லைபோல் தெரிகின்றது. அதாவது, டெனீஸ்வரனைப் பதவியில் இருந்து நீக்குவதாகக் கூறி அனுப்பிய எழுத்திலான கடிதம் ஆளுநரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. அதன் பின்னரே புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள். முன்னைய அமைச்சரை நீக்குவதாக அவருக்கு அறிவிக்கப்பட்டும் ஏன் அதனை ஆளுநர் வர்த்தமானியில் பிரசுரிக்கவில்லை என்ற கேள்வியை நீதியரசர்கள் கேட்கவில்லை. கேட்டிருந்தால் நியமிக்கும் அல்லது பதவி இறக்கும் உரித்துப் பற்றி நீதியரசர்கள் ஆராய்ந்திருக்கத் தேவையில்லை. ஆளுநர் தன் கடமையில் தவறிவிட்டார் என்பது வெளிப்படுத்தப்பட்டிருக்கும். எனினும், ஆளுநருக்கே சகல உரித்துக்களும் உண்டு என்று நீதிமன்றம் கூறுவதில் இருந்து 13வது திருத்தச் சட்டத்தின் குறைபாட்டை மக்கள் அறியக் கூடியதாக இருக்கின்றது. இந்த 13வது திருத்தச் சட்டத்தை ஒட்டிய அரசியல் யாப்பையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 'புதிய யாப்பு' 'புதிய யாப்பு' என்று துள்ளுகின்றது. ஆளுநர் அரசாங்க முகவர், முதலமைச்சர் மக்களால் தேர்ந்தெடுக்கபட்டவர். மக்கள் பிரதிநிதிக்கு இல்லாத உரித்து ஆளுநருக்கு உள்ளதாக நீதிமன்றம் கூறியுள்ளதை வைத்து 13வது திருத்தச் சட்டம் எவ்வளவு வலுவற்றசட்டம் என்பது இப்பொழுது எல்லோருக்கும் புரிந்திருக்கும். இனியாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றெடுக்க முன் வருமா? எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## நல்லூர் அலங்...

யேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி வரையில் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில் ஆலயத்தின் பாதுகாப்பையும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் முகமாக ஆலயத்தை சூழவுள்ள வீதிகள் பொது போக்குவரத்திற்கு மூடப்பட்டு வீதித் தடைகள் போடப்பட்டு, மாற்று வீதிகள் ஊடாக வாகனங்கள் செல்வதற்கான ஏற்பாடுகள் வழமை போன்று செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலில் நேற்றைய தினம் விசேட தேடுதல் நடவடிக்கைகளை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்டு ஆலயச் சூழலை தமது பாதுகாப்பின் கீழ் கொண்டு வந்துள்ளனர்.

ஆலயத்திற்கு வருவோரில் சந்தேகத்திற்கு இடமானவர்களை சோதனை செய்வதற்கான சோதனைக்கூடங்கள் ஆலயத்திற்கு செல்லும் நான்கு வீதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இம்முறை ஆலய சூழலில் 40க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, இம்முறை பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக சுமார் 25 இலட்சம் ரூபாய்க்கு மேல் யாழ்.மாநகர சபை செலவு செய்வதாக தகவல்கள் மூலம் அறியக் கிடைத்துள்ளன. (ம-3)

## விபத்துக்குள்...

ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு இரணைப்பாலையைச் சேர்ந்த 19 வயதுடைய புஸ்பராசா - கவியரசன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு சூசையப்பர் கோவிலடியில் கடந்த வியாழக்கிழமை கப் ரக வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மேற்படி இளைஞர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,316)

## நல்லூருக்கு...

தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இன்று ஆரம்பமாகவுள்ள, யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தில், பக்த அடியார்கள், சோதனை நடவடிக்கையின் பின்னர் ஆலயத்திற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள் எனவும், இதற்காக சிறப்பு சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதனால், பக்த அடியார்கள், அச்சமின்றி வழிபாடுகளில் ஈடுபட முடியும் எனவும், யாழ். மாநகர சபை முதல்வர் இம்மானுவேல் ஆர்னல்ட் அறிவித்துள்ளார்.

25 நாள் திருவிழாவும், சிறப்பாக இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு, பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், யாழ். மாநகர சபை முதல்வர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## சஹ்ரானுடன்...

பட்டனர்.

இதேவேளை பயங்கரவாதி சஹ்ரானுடன் நுவரெலியாவில் ஆயுதப் பயிற்சி பெற்ற குற்றச்சாட்டில் நேற்று ஜமியத்தே மில்லாது இப்ராஹிம் அமைப்பின் அநுராதபுர மாவட்ட அமைப்பாளர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## ஏரியில் மூழ்கி...

மாநிலத்தில் உள்ள லூசர்ன் ஏரியில், நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் ஈழத்தமிழ்ச் சிறுமி ஒருவர் விழுந்து உயிரிழந்துள்ளார். சுவிட்சர்லாந்தில் வசிக்கும் ராஜ்மதன் சோனா என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நிட்வால்டன் மாநிலத்தின் லூசர்ன் ஏரியில் உள்ள அவாசர் ஆற்றின் கரையோரம் தனது உறவினருடன் விளையாடிக் கொண்டிருந்த நிலையில் யாரும் எதிர்பாரா நேரத்தில் சிறுமி தண்ணீரில் விழுந்து மூழ்கியுள்ளார். சிறுமியுடன் மற்றுமொருவரும் நீரில் மூழ்கியுள்ளார்.

ஆற்றில் ஒன்பது மீற்றர் ஆழத்தில் இருந்து சிறுமியும் மேலும் ஒரு நபரும் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட உடனேயே முதலுதவிகள் வழங்கப்பட்டபோதும் குறித்த சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். (ம-3)

## ஜனாதிபதி வேட்...

சுமார் 250க்கும் மேற்பட்ட மக்கள் நேற்று முன்தினம் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய முன்றலில் ஆயிரம் தேங்காய்களை உடைத்து வழிபாடு மேற்கொண்டனர்.

இங்கு கருத்து தெரிவித்த வடபகுதி மக்கள், நாங்கள் அனைவரும் மிகவும் எதிர்பார்ப்புடனும் ஆவலுடன் காத்திருக்கும் ஒரே வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக அவரது கட்சி நிறுத்த வேண்டும் என்பதுதான், எமது கோரிக்கை. அவ்வாறு அவர்கள் நிறுத்த தவறினால் 2005ஆம் ஆண்டு போன்று தமிழ் மக்கள் ஒரு சூழலை மீண்டும் எதிர்கொள்வதற்கான வாய்ப்பு உண்டு என அவர்கள் தெரிவித்தனர். (ம-281)

## யாழில் திடீரென...

சுவாமி ஆலய வருடாந்த திருவிழா இன்று ஆரம்பமாகின்றது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் ம்ாநகர எல்லையில் கொழும்புத்துறை பிரதான வீதி, ஸ்ரான்லி வீதி உள்ளிட்ட பல இடங்களில் வீதித் தடை போடப்பட்டு சந்தேகத்துக்கு இடமான வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றன.

கொழும்புத் துறைப் பகுதியில் சோதனையிடப்படுவோரின் அடையாள அட்டையும் பதிவு செய்யப்படுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட அறிவுறுத்தலையடுத்தே இராணுவ சோதனைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

## பலாலி விமான...

வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகையால்தான் நுழைவாயிலை மேற்குப் பக்கமாக மாற்றி அமைத்தால் பலாலி விமான நிலையத்தின் பாதுகாப்பையும் கடற்கரையோர பாதுகாப்பையும் காரணம் காட்டி குறித்த கிழக்குப் பக்கமாக உள்ள தனியார் காணிகளைக் கையகப்படுத்தி விடலாம் அல்லது விடுவிக்காமல் காரணம் கூறுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்தி விடும்.

மேலும் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையை அண்டிய தெற்குப் பகுதியில் ஏறக்குறைய 800 ஏக்கர் தனியார் காணி காணப்படுவதுடன் பிரதான வைத்தியசாலை வீதியும் காணப்படுகிறது. அத்தோடு கிழக்குப் பக்கமாக ஏறக்குறைய 1200 ஏக்கர் தனியார் காணிகளை உள்ளடக்கிய பிரதான இணைப்பு வீதியான பலாலி அச்சுவேலி இணைப்பு வீதியின் எஞ்சிய பகுதிகளும் விடுவிக்கப்படாமல் போய் விடும் என்ற அச்சம் தோன்றுகிறது.

அபிவிருத்தி என்ற போர்வையில் பொது மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதும் விடுவிக்கப்படாமல் போவது பற்றியும் மக்கள் விழிப்படைவதுடன் தமிழ் அரசியல்வாதிகள் உரிய தரப்பினருக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும். (ம-3,10)

## பாராளுமன்ற...

கருமான ஆனந்தகுமாரசிறி தெரிவித்தார்.

தெரிவுக்குழுவினால் எவருக்கும் தண்டனை வழங்க முடியாது. நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய சில பிரிவுகளில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின் அதனை சுட்டிக்காட்டி நிறைவு செய்வதே பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவின் செயற்பாடு எனவும் தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதி சபாநாயகருமான ஆனந்தகுமாரசிறி தெரிவித்தார். (ம-3)

























# தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிட்டால் மக்கள் ஒருபோதும் எம்மை மன்னிக்கமாட்டார்கள்

## இனியும் தமிழர்களை ஏமாற்றமுடியாது என்கிறார் – செல்வம் எம்.பி

(வவுனியா)

அரசின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறில்லாவிடில் மக்கள் ஒருபோதும் எம்மை மன்னிக்க மாட்டார்கள் என்பதுடன் மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

காணாமல்போனோர் விவகாரத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திடமிருந்து சர்வதேசத்தினால் பெற்றுக்கொடுக்க முடியாத நீதியை பிளவுபட்ட தமிழ் அரசியல்வாதிகளால் பெற்றுக்கொடுக்க முடியுமா? தமிழ்த் தலைமைகள் அனைவரும் ஒன்றிணைந்தால் நிச்சயமாக அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தைப் பிரயோகிக்க முடியும். அவர்களின் ஒற்றுமையும், பதவியும் தான் அரசுக்கு எதிரான ஆயுதம் என்பதை உணர வேண்டும் என்று காணாமல்போனோரின் உறவுகள் அமையம் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

நாட்டின் இருபெரும் முக்கிய கட்சிகள் சர்வதேசத்தின் ஆதரவுடன் ஆட்சியமைத்த போது, அந்த அரசாங்கத்திற்கு தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய இயலுமை காணப்படும் என்ற எண்ணத்திலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவ்வரசாங்கத்திற்கு அனுசரணை வழங்கியது. அதன்படி படையினரால் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகள் சில மீள ஒப்படைக்கப்பட்டமை, காணாமல் போனோர் அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டமை உள்ளிட்ட சில விடயங்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும் அவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையே தொடர்கிறது.

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் எமது கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக படையினர் வசமுள்ள பொதுமக்கள் காணிகளை விடுவிக்கும் விவகாரத்தில் இராணுவத்தினருக்குப் பொறுப்பாக ஜனாதிபதியே இருக்கின்றார். எனவே அவருக்கு இதுகுறித்து அழுத்தத்தை வழங்கினாலும் கூட, அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையுள்ளது. எம்மால் அவருக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முடியுமே தவிர நிபந்தனைகளை விதிக்க முடியாது.

அதேபோன்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் அவ்வப்போது இலங்கைக்கு வந்து போகிறார்கள். அதன்போது ஐ.நா.வின் தீர்மானத்தை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்ற அழுத்தத்தைப் பிரயோகித்தாலும், அவ்விடயத்தில் பொறுப்புக்கூறும் வகையில் அவர்களும் செயற்படுவதாகத் தெரியவில்லை.

இந்நிலையில் அரசின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எவையேனும் மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் ஒருபோதும் எம்மை மன்னிக்க மாட்டார்கள். அதேபோன்று மக்களை ஏமாற்ற முடியாது என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே இந்த அரசாங்கம் எஞ்சியுள்ள தனது பதவிக்காலத்தில் பாராளுமன்றத்தில் கொண்டுவரும் பயன்தராத யோசனைகள் எவற்றுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கக் கூடாது என்பதே எனது நிலைப்பாடாகும் என்றார்.

ஆனால் எதிர்வரும் தேர்தல்களில் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட்டாலும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்று நம்புவதாக ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் கருத்து வெளியிட்டிருந்தாரே என்று வினவியபோது அதற்கு பதிலளித்த செல்வம் அடைக்கலநாதன் எம்.பி

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா என்பது குறித்து நாங்கள் தான் கலந்தாலோசித்து தீர்மானிக்க வேண்டும். அவ்வாறிருக்க நாங்கள் ஆதரவு வழங்குவோம் என்று அவர்களாக நம்புவது தவறாகும். எமது தீர்மானத்தை நாங்களே எடுப்போம் என்று தெரிவித்தார். (ம-3)





**துரித தபால்கள் பொதிகள் சேவை**

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு UK - 600/= Germaney - 700/= France - 700/=

**திருமுருகன் கொம்நெற்**
321, K.K.S.Road, Jaffna.
கிளை : திருநெல்வேலி, நெல்லியடி.
0777 554 528 (C-7109)

**கற்பித்தல் துறையில் ஆர்வமுள்ள**

A/L பரீட்சைக்குத் தோற்றிய, தோற்றுகின்ற ஆண், பெண் இருபாலாரிடமுமிருந்து விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு, குடியியல், வணிகம் ஆகிய பாடங்களை முழுமையாக கற்பிக்கக் கூடியவர் மற்றும் தரம் 1-11 வரை கற்பிக்கக் கூடிய (கிளி நகரை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.) (C-7202)
இல.132 இரத்தினபுரம், கிளிநொச்சி.
தொடர்புகளுக்கு : 077 888 8648 / 021 435 3235

**SPOKEN ENGLISH**
கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி
தொழில்புரிவோர், தொழில்தேடுவோர், பல்கலை மாணவர்கள் பட்டதாரிகள் மற்றும் இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 10.08.2019 சனி
1. காலை 08-10 2. மாலை 03-05
அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
ஆங்கிலத்தில் ஒரு சொல் தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசலாம்!
SAAMSON இங்கிலிஸ்வேக் செங்
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567
021 222 4282
(C-7198)

**மாபெரும் மலிவு விற்பனை**

நல்லூர் ஆலய உற்சவத்தினை முன்னிட்டு சகல விதமான புத்தகங்களுக்கும் **10% - 70 %** வரையான விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**O/L, A/L** கடந்தகால வினாவிடை தொகுப்புகளுக்கு **30%** விசேட விலைக்கழிவு (2018ஆம் ஆண்டு உட்பட)

நல்லூர் உற்சவ கால சிறப்பு விற்பனை (நல்லூர் சிவன் கோயிலுக்கு அருகில்)

**சாய் லங்கா புத்தகசாலை**
இல.02, மருதனார்மடம், சுன்னாகம்.
021 222 4858 / 077 185 6010 வைபர் - 077 502 7767 (C-7210)


## தொல்பொருள் திணைக்களத்தில்

# பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 12 பேர் புதிதாக நியமிப்பு

## தமிழர்களை புறக்கணிப்பதாக குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் உள்ள வெற்றிடங்களுக்கு பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 12 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அரச நியமனங்களில் தொடர்ந்தும் தமிழர் புறக்கணிக்கப்பட்டு வருவதாக புத்திஜீவிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல திணைக்களங்களின் கீழ் உள்ள வெற்றிடங்களுக்கு வடக்கில் தமிழர் புறக்கப்பட்டு பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் தொடர்ச்சியாக நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் வடக்கு மாகாணத்தில் உள்ள 200க்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் கடந்த ஒன்றரை வருடங்களாக கடமையாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் உள்ள தொல்பொருள் திணைக்களத்துக்கு பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 5 பேரும் வவுனியாவில் உள்ள தொல்பொருள் திணைக்களத்துக்கு பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 7 பேரும் கடந்த முதலாம் திகதியில் இருந்து புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த பலருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் பலர் பணிபுரியும் நிலையிலும் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லைவெற்றிடங்கள் பல இருந்தும் அங்கு தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-3,9)


**ஆங்கில வகுப்பு**

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken With Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (9812)
தொடர்புகளுக்கு : 076 707 0069
M.Suren

**யாழ் மதர் கெயார்**
Dental Unit
Reg.No.#PV85754
நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால்
கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல்
உட்பட உயர்தர சேவைகள்
- பல் வெண்மையாக்கல்
- பல், வாய் வைத்தியசேவை
- வேரடைப்பு
- சிறுவர் பற் சிகிச்சை
- மிதப்புப்பல் சீராக்கல்
- மற்றும் பல நவீன சேவைகள்

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Mob : 077 375 4490, 077 220 2769
(C-7209)

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
இத்தாலி - 700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
(C-7197)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.